

மோகனதாஸ்,
கலைமகள்
அரையிறுதியில்
பக்கம் 23

# உதயன்

சுடர்: 29 கதிர்: 209 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 9, திங்கள் 23.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=


32°C

தெளிவான வானிலை

நாட்டைச் சூழவுள்ள கடற்கரைப் பகுதிகளில் காற்று மணிக்கு சுமார் 70-80 கிலோமீற்றர் வேகத்தில் வீசக் கூடும்.

# ஐ.நாவில் சாட்சியமளிப்போரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்

## இலங்கைக்கு அது தொடர்பில் அழுத்தம் வழங்கப்படும் என்று கூறுகின்றார் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ்



யாழ்ப்பாணம், ஜுன் 23
ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிக்கும் தமிழர்களுக்குரிய பாதுகாப்பு வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு உரிய அழுத்தங்கள் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவருடன் நடத்திய சந்திப்பின்போது, ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிக்கும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. அதுகுறித்துக் கூறும் போதே ஐ.நா உதவிச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வ

20 ஆம் பக்கம் பார்க்க

## முடங்கியது ஜனாதிபதியின் இணையத்தளம்?

கொழும்பு, ஜுன் 23
ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது நடத்தப்பட்ட ஊடுருவலால் அந்த இணையத்தளம் செயலிழந்தது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் பல முக்கிய அரச நிறுவனங்களின் இணையங்களும் கூட சில தரப்புக்களினால் ஊடுருவிச் செயலிழக்கச் செய்ய வைக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

அளுத்கம, பேருவளை பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளை அடுத்து இலங்கை அரசின் இணையத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று ஒரு குழு அறிவிப்புச் செய்திருந்தது என்றும், 'ஒப்பரேசன் சிறீலங்கா' என அந்தக் குழுதம்மை அழைத்துக் கொள்கின்றது என்றும் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில்ஜனாதிபதியின் இணையத்தளம் மீதும் ஊடுருவல்

20 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் பிரச்சினை குறித்து ஐ.நா. சபை தீவிர கவனம்

## நேற்றும் கூட்டமைப்பை சந்தித்துப் பேசினார் தரங்கோ

யாழ்ப்பாணம், ஜுன் 23
இலங்கை தமிழர் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தனது விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளது. ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கும், பொதுச் செயலாளருக்கும் அறிக்கை சமர்ப்பிக்க, இலங்கைக்கு வருகை தந்து பல தரப்பட்டவர்களுடனும் சந்திப்புக்களை நடத்தி வரும் ஐ.நாவின் அரசியல்

20 ஆம் பக்கம் பார்க்க



# திருப்தி கொள்ள முடியாத ஊடக சுதந்திர நிலைமை

## இலங்கையில் காணப்படுகின்றது என்கிறது எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு

நியூயோர்க், ஜுன் 23
இலங்கையின் ஊடக சுதந்திர நிலைமைகள் குறித்து எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கையில் உள்ள ஊடக சுதந்திர நிலைமைகள் குறித்து திருப்தி அடைய முடியாதுள்ளது என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் அளுத்கமவில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளின் போது செய்திகள் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினை

20 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பாம்



யாழ்ப்பாணம், ஜுன் 23
கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கிணற்றிலிருந்து ஒருதொகுதி ஆயுதங்களை மீட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர் கல்லூரி அதிபரால் வழங்கப்பட்ட தகவலை அடுத்தே அவை மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அழுக்கவெடி, கைக்குண்டு மற்றும் ஆர்.பி.ஜி செல் என்பனவே மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (ந-4)

## கிளர்ச்சியாளர் வசம் வீழ்கிறதா பாக்தாத்?



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்காவால் கைது செய்யப்பட்டு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர், இயக்கமற்று இருந்த அவரது ஆதரவாளர்கள் பல ஆண்டுகளின் பின்னர் மீளெழும்பத் தொடங்கியுள்ளனர். ஈராக் அரசுக்கு எதிரான தாக்குதல்களைத் தற்போது ஆரம்பித்துள்ள அவர்கள் மிக வேகமாக அங்குள்ள நகரங்களைக் கைப்பற்றி வருகின்றனர். அரச படைகளால் எதுவும் செய்ய முடியாத நிலையில் தலைநகர் பாக்தாத்தை நெருங்கியுள்ள அவர்களின் கைகளில் எந்நேரமும் அந்த நகரம் விழலாம் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

# விசாரணைகள் செய்வதற்கு எவருக்கும் அனுமதியில்லை

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 23
மனித உரிமை மீறல் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு எவரையும் இலங்கைக்குள் அனுமதிப்பதில்லை என்று நாம் முடிவெடுத்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா.

மடவளையில் இடம்பெற்ற அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறும்போது,

20 ஆம் பக்கம் பார்க்க

# நாட்டை சீர்குலைப்பதற்கு சர்வதேச சக்திகள் முயற்சி

## ஜனாதிபதி கூறுகின்றார்

கொழும்பு, ஜுன் 23
நாட்டை சீர்குலைக்கும் தீவிர முயற்சிகளில் சர்வதேச சக்திகள் ஈடுபட்டுள்ளன என்று எச்சரித்துள்ள இலங்கை ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷ இலங்கை மக்கள் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாகச் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நெருக்கடியான நிலைமையைப் புரிந்துகொண்டு, சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும், நட்புறவையும் கட்டி வளர்ப்பதற்காகப் பணியாற்றுமாறு சகோதரப் பிர



ஜைகள் அனைவரையும் நான் கௌரவத்துடன் கோருகிறேன். - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு விடுத்த விசேட செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஞ)

விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்

# பொருளாதார தடை விதிக்கவே ஐ.நா. திட்டம் அதற்கு துணைபோகிறது தமிழ் கூட்டமைப்பு


## கவலை வெளியிடுகின்றார் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸவிதாரண

கொழும்பு, ஜுன் 23
"இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத்தடை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அனைத் துலக சமூகத்திடம் முன்வைப்பதற்குரிய பொறிமுறைத் திட்டங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபை தற்போது வகுத்துவருகின்றது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவது அரசுக்கு கவலையளிக்கின்றது."- இவ்வாறு தெரிவித்துள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் கூட்டணி அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

"ஐ.நாவிடமோ அல்லது அமெரிக்காவிடமோ முறையிடு

20 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். நகர் கடைகளில் அநாமதேய சுவரொட்டி



யாழ்ப்பாணம், ஜூன் 23.
யாழ். நகர்ப் பகுதியில் உள்ள கடைகள் சில வற்றின் கதவுகளில் அனாமதேய துண்டுப் பிரசுரம் ஒன்று இனந் தெரியாதவர்களால் வைக்கப்பட்டுள்ளன. அதில் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களிடையே இனவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் வெளிநாட்டு சக்திகள் முயற்சித்து வருகின்றன. அவற்றுக்கு நீங்கள் துணை போகாதீர்கள் என்றவாறு அச்சிடப்பட்டிருந்தது.

இனந்தொயாத நபர்களினால் இத்துண்டுப்பிரசுராங்கள் செருகி விடப்பட்டிருக்கலாம் என கடை உரிமையாளர்கள் சந்தேகிக்கின்ருர்கள்.

இனாங்களுக்கு இடையே முரண்பாடுகள் ஏற்படக்கூடியதாகவோ அல்லது அதற்கு உடந்தையாக இருப்பவாகளின் திட்டங்களுக்கோ அல்லது சதித் திட்டங்களுக்கோ உதவி செய்யாமல் இருக்க நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றவாறு அந்த துண்டுப் பிரசுரத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

சமாதானத்தை விரும்பும் சிங்கள, தமிழ் முஸ்லிம் ஒன்றுபட்ட பொது அமைப்பு என்று முகவரியிடப்பட்டு இந்த துண்டுப் பிரசுராங்கள் கடை வாயில்களில் திணிக்கப்பட்டிருந்ததாக நேற்று மாலை சில கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-4-101)

## தேரர் ஏன் கொல்லப்பட்டார்?

விளக்குகிறார் பொலிஸ் பேச்சாளர்

பொலநறுவை, எலஹேர பிரதேசத்தில் பக்கமுன எனும் பகுதியிலுள்ள ஹீரடியே புண்ணிய வர்தன விகாரையின் விகாராதிபதியான 54 வயதுடைய அலகொலமட தம்மரத்ன தேரர் நேற்றுமுன்தினம் இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை பக்கமூன பொலிஸ் பிரிவுக்கு வந்த தொலைபேசிஅழைப்பை அடுத்து, குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் உடனே விகாரையின் உள் அறையில் இறந்துகிடந்த தேரின் உடலைபக்கமூன வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் தது.

அத்தோடு, இச்சம்பவத் தின் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரின் பாதணி ஜோடி., சிகரெட் மற்றும் அவர் பயன் படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் மதுபான போத்தல் ஒன்றையும் பொலிஸார் விகாரையின் வளாகத்திலிருந்து மீட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவமானது தனிப்பட்ட குரோதத்தின் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன, தேரர் கொலையுடன் தொடர்புடையவரின் கைரேகையை பெற்று விட்டதாகவும் இவரை கைது செய்யும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# முஸ்லிம்களுக்கு தலைமையாக நிதானமாக சிந்திப்பவரே தேவை

கொழும்பு, ஜூன், 23
முஸ்லிம் மக்களுக்கு இப்போது தேவைப்படுவது உணர்ச்சி பூர்வமான தலைமை அல்ல. அறிவார்ந்த ரீதியில் சிந்தித்து பயன்னுள்ள முடிவுகளை எடுக்கும் தலைமையே. இவ்வாறு தெரிவித்துள்ளார் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான பசீர் சேகுதாவூத்.

அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் சங்கத்தின் 64ஆவது மாநாட்டில் விசேட பிரதிநிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகளை அரசு கட்டுப்படுத்தா விட்டால் முஸ்லிம் மக்களது ஆதரவை மட்டுமன்றி பௌத்தர்களது ஆதரவையும் இழக்க நேரிடும். இந்த நாடு ஒற்றுமையாக இருப்பதையே சகல தரப்பினரும் விரும்புகின்றனர். இவ்வாறன சூழ்நிலையில் குறிப்பிட்ட சில குழுக்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன் இன ரீதியான, மத ரீதியான ஒற்றுமையையும் குலைக்கின்றன.

இன்று முஸ்லிம்கள் நாட்டுக்காக என்ன செய்தார்கள் என்று சில பேரின வாதிகள் கேட்கின்றனர். பண்டமாற்று பொருளாதாரம் நடைமுறையில் இருந்த காலத்தில் இலங்கை மக்களுக்கு நாணயப் பரிமாற்றத்தை அறிமுகப்படுத்தியவர்கள் முஸ்லிம்கள் தான். விதம் விதமான உணவு வகைகளை அறிமுகப்படுத்தியவர்களும் முஸ்லிம்கள் தான்.

சமூக வலைத்தளங்களில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்படுகிறது. நாம் சிந்தனை ரீதியான பதில்களை வழங்குவதன் மூலமே அதனை முறியடிக்க முடியும் - என்றார்.

(ஐ-10)



லைக்காஸ் ஞானம் அறக்கட்டளையின் சமூக நல செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கான முதலாவது மாவட்ட அலுவலகம் முல்லைத்தீவு முள்ளியவளையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
(ஐ 102)

# தவ்ஹீத்தின் இன்றைய ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 23
அளுத்கம, பேருவளை மற் றும் தர்ஹா நகர் போன்ற இடங்களில் கலவரங்களில் ஈடுபட்டவர்களை குறுகிய காலத்துக்குள் கைதுசெய்வதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க உறுதியளித்ததைத் தொடர்ந்து இலங்கை தவ்ஹீத் ஜமா அத்தால் இன்று கொழும்பில் நடத்த விருந்த ஆர்ப்பாட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வர்களையும் இக்கலவரத்துக்குக் காரணமாக அமைந்த பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசார தேரரையும் கைதுசெய்யுமாறும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை துரிதகதியில் மீளக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரி இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் இன்று கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலை யத்துக்கு முன்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தது.

இது தொடர்பில் இலங்கை தவ்ஹீத் ஜமாஅத்துக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர திஸாநாயக்கவுக்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம் பெற்றது.

மேற்படி கலவரத்தில் ஈடுபட்டவர்களை மிக விரைவில் கைது செய்வதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைப்பதென்று இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் தீர்மானித்துள்ளது.

# குற்றத்தடுப்புப் பிரிவிடம் விசாரணை ஒப்படைப்பு

பாணந்துறையில் அமைந்துள்ள 'நோலிமிட்' கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரிடம் கையளிக் கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

'நோலிமிட்' நிறுவனத்தின்பாணந்துறை காட்சியறை கடந்த சனியன்று இனந்தெரியாதோ ரால் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது. இதனால், உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லையெனிலும் காட்சியறைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

காட்சியறைக்கு விஷமிகளாலேயே தீ வைக்கப்பட்டுள்ளதாக குறித்த கடைத்தரப்பு சந்தேகிக்கப்பட்டாலும் பொலிஸார் இன்னும் அதனை உறுதி செய்யாது இச்சம்பவம் மின் கசிவிலா? அல்லது விஷமிகளின் செயலா? காரணம் என இரண்டு கோணாங்களில் தமது ஆரம்பக் கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருவ தாகவும் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த வாரம் இடம்பெற்ற பேருவளை- அளுத்கம கலவரம் தொடர்பிலும் தற்போது துரிதகதியில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தகக்து.

# இலங்கைக்கு கடத்த இருந்த கஞ்சா தமிழகத்தில் பறிமுதல்

இராமநாதபுரம், ஜூன், 23
தமிழகத்தின் பாம்பன் தீவு குந்துகால் கடற்கரையில் வைத்து மூன்று பேரை தாம் கைது செய்தனர் என்றும் அவர்களிடம் இருந்து 50 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கஞ்சா இலங்கைக்கு கடத்தப்பட இருந்ததாகவும் தமிழகக் கடலோரக் காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், தங்கச்சிமடம், இராமேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அந்தப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருந்தனர் என்றும் இதன் போது இராமேஸ்வரம் நடராஜ புரத்தை சேர்ந்த மூவர் பாம்பன் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய வேளை அவர்களை விசாரித்த போது கடத்தல் அம்பலமானதென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், இராமேஸ்வரத்தில் இருந்து கடல் வழியாக படகு மூலம் இலங்கைக்கு தாம் கஞ்சா கடத்த முற்பட்டனர் என்று தெரிவித்தனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-10)

## விசாரணை அதிகாரியாக நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
இலங்கை மனித உரிமைகள் இயக்கத்தின் யாழ்.மாவட்ட விசாரணை அதிகாரியாக புனித யாகப்பா வீதி இளவாலையைச் சாந்த திரு. ஆசீர்வா தம் சான் பெனற் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரியாகவும் பதவிவழி சமாதான நீதிவானாகவும் பணியாற்றி வரும் இவர் உளசமூக ஆலோசகராகவும் உளவளத் துணையாளராகவும் சேவையாற்றி வருகிறார்.

அண்மையில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் தேசிய ரீதியில் சமூக சேவையாளர்களுக்கு வழங்கப்படும் சாமசிறி தேச கீர்த்தி எனும் விருதையும் பெற்றுக்கொண்டமை குறிப் பிடத்தக்கது. (ஐ-106)

# 12 இலங்கை மீனவர்கள் இந்தியப்படையால் கைது

கொழும்பு, ஜூன் 23
அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 12 இலங்கை மீனவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

சென்னை அருகே இந்தியக் கடல் எல்லையில் வழக்கமான கண் காணிப்புப் பணியில் கடலோரக் காவல் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சென்னையில் இருந்து 105 கடல் மைல் தொலைவில் 2 படகுகளில் 12 இலங்கை மீனவர்கள் மீன் பிடித்து கொண்டிருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து, இந்தியக் கடற்படையினர், 12 இலங்கை மீனவர்களையும் கைது செய்து, அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்தனர். பின்னர், அந்த மீனவர்கள் அனைவரும் சென்னை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

> “இந்தியக் கடற்படையினர், 12 இலங்கை மீனவர்களையும் கைது செய்து, அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

இந்த ஆண்டில் மட்டும் 105 இலங்கை மீனவர்களை கைது செய்துள்ள இந்திய கடற்படை 21 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

# எதிர்வரும் ஜனவரிக்குள் பாதீனியத்தை களைக

## இல்லாவிடில் நடவடிக்கை எடுக்க வட மாகாண விவசாய அமைச்சு தீர்மானம்

யாழ்ப்பாணம்.ஜூன் 23

வீட்டுக்காணிகளிலோ அல்லது தோட்டக்காணிகளிலோ பாதீனியம் காணப்பட்டால் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வட மாகாண விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தபோது அதற்கான சூழலை உருவாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தமைக்கு அமைவாக தற்போது அவை வெகுவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வடமாகாண விவசாய அமைச்சால் கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்தில் பரவியுள்ள பாதீனியத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் வெகுவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் இவற்றைக் கட்டுப்படுத்த மக்களது ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்கவில்லை. குறிக்கப்பட்ட பிரதேசங்களில் மட்டும் பாதீனியம் அழிக்கப்பட்டு வருகிறது. இதற்காக வட மாகாண விவசாய அமைச்சால் நிதியும் செலவு செய்யப்படுகிறது.


எதிர்காலத்தில் இந்த பாதீனியம் அதிகமாகப் பரவுவதால் விளை நிலங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது பரவும் அபாயம் ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத் தும் நோக்குடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

வீட்டுக்காணிகளிலோ அல்லது தோட்டக் காணிகளிலோ பாதீனியச் செடி காணப்பட்டால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன்போது 6 மாதச் சிறை தண்டனையும் ஒரு லட்சம் ரூபா வரையிலான தண்டப் பணமும் செலுத்த நேரிடும். எனவே தமது காணி களில் பாதீனியங்களை காணப்பட்டால் அதனை உரியமுறையில் அழித்து அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பை தவிர்த்துக் கொள் ளுமாறும் தெரிவித்துள்ளது.

**எதிர்காலத்தில் இந்த பாதீனியம் அதிகமாகப் பரவுவதால் விளை நிலங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது பரவும் அபாயம் ஏற்படும்.**

தற்போது வட மாகாண விவசயஅமைச்சால் முதல் கட்டமாக ஒரு கிலோ 10 ரூபா எனும் அடிப்படையில் பாதீனியம் கொள்வனவு செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமான கொள்வனவுநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (வ-14)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபை வளாகத்தில் நேற்றுமுன்தினம் மரநடுகை இடம் பெற்றது. பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் மரக்கன்றை நடுகிறார். (வ-7)

# பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக வட மாகாணத்தில் 21 இடங்கள் அறிவிப்பு

## தேசிய மரபுரிமைகள் அமைச்சு வர்த்தமானி மூலம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளையும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு பாதுகாக்கப்பட்ட தொல்லியல் இடங்களாகப் பிரகடனப் படுத்தி 20.06.2014 திகதிய வர்த்தமானியில் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில், மடு பிரதேச செயலாளர் பிரிவில், சின்னப்பண்டிவிரிச்சான் (கி.அ. பி. இலக்கம் 37) கிராம அலு வலர் பிரிவில், சின்னப் பண்டி விரிச்சான் இடப்பரப்பில் அமைந்துள்ள தொல்லியல் சிதைவுகள், பெரிய பண்டிவிரிச்சான் இடப் பரப்பில் உள்ள தாது கோபுரத்தை உள்ளடக்கிய மேட்டு நிலத்துடனான தொல்லியல் சிதைவுகளின் இடம்.

இரணை இலுப்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் 42) அமைந்துள்ள இரணை இலுப்பைக் குளத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலின் சிதைவுகள்.

மாந்தை தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், முந்தன் புட்டி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள புராதன தங்கு மடம் (முந்தன்புட்டி அம்பலம்).

அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவில், விடத்தல்தீவு கிராம அலுவலர் பிரிவிலுள்ள (கி. அ. பி. இலக்கம் என். எம். 11) விடத்தல் தீவு கிராமத்தில் பிள்ளையார் கோவில் தூராம மடம் என அறியப்படுவதுமான இடப் பரப்பிலுள்ள புராதன தங்குமிடம். (அம்பலம்).

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், முருங்கன் கிராம அலுவலர் பிரிவில் அதனை அண்மித்து அமைந்துள்ள முருங்கன் வைத்திய சாலையின் ஆள்புலத்தில் உள்ள கல்வெட்டுக்களும் தொல்பொருளியல் சிதைவுகளும்.

இரட்டைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் 125ஏ) அமைந்துள்ள கே. கே. குளம் கிராமத்தி லுள்ள முருங்கன் ரஜமகா விகாரை பூமியிலுள்ள சகல சிதைவுகளும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில், கல்விளான் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் எம். யூ. 17) அமைந்துள்ள கல்விளான் என்று அறியப்படுவதான இடப்பரப்பிலுள்ள புராதன தூபி உள்ள மேட்டு நிலம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், திரு முறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் 75) அமைந்துள்ள கொக் காவில் தொலைக் காட்சி ஒளிபரப்புக் கோபுரத்தை அண்மித்துள்ள தொல்லியல் சிதைவுகள் உள்ள இடம்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், பாலிநகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொல்லவலாம்குளம் கிராமத்தில் நாகதம்பிரான் கோவில் பூமியிலுள்ள புராதன தாது கோபுர மேட்டு நிலம், கட்டடச் சிதைவுகள் மற்றும் பாதக் கற்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், மண்ணக் கண்டால் கிராம அலுவலர் பிரிவில் கெருடமடு கிராமத்திலுள்ள புராதன கட்டடத்தின் சிதைவுகள் உள் ளடங்கலாக சிதைவுகள் உள்ள இடம்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், வன்னி விளான்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பாலொப் பானி கிராமத்திலுள்ள பாலொப் பானி சிதைவுகள் உள்ள இடம்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், வன்னி விளான் குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பாலொப் பானி கிராமத்திலுள்ள பெரிய தெகிலம்குளம் இடப்பரப்பில் உள்ள புராதன கட்டடங்களின் சிதைவுகளைக் கொண்டுள்ள இடம்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், பாண்டியன் குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள விநாயகபுரம் கிராமத்தில் நெல் வயலிலுள்ள புராதன சிதைவுகளுடனான மேட்டு நிலமும், பாதக் கற்களும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முகுதுபட பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குமார புரம் (கி. அ. பி. இலக்கம் 72) கிராம அலுவலர் பிரிவில் குமாரபுரம் கிராமத்திலுள்ள குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுதம் முருகன் கோவிலை அண்மித்துள்ள கற்தூண்களுடனான தொல்லியல் சிதைவுகள் உள்ள இடம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில், சாராபிட்டி கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் து-2) அமைந்துள்ள புராதன குதிரைகள் லயம்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில், கரம்பன் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் து - 51) கரம்பனிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயம்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில், கரம்பன் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் து - 51) கரம்பனிலுள்ள புனித அந்தோனியார் விலா (ஆயர் இல்லம்).

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில், கந்தரோடை கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் து - 200) அமைந்துள்ள கதுருகொட குடியேற்றம்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில், யாழ்ப்பாணம் கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் து - 74) அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலுள்ள மாடின்ஸ் மிஷனரி கட்டடம்.

வவுனியா மாவட்டத்தில், நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், மாறா இலுப்ப கிராம அலுவலர் பிரிவில் (கி. அ. பி. இலக்கம் 22) அமைந்துள்ள பனை நின்றான் கிராமத்திலுள்ள செங்கல் அத்திபாரங்களும் மற்றும் கற்தூண்களுடனான சிதைவுகள் உள்ள இடம்.ஆகிய இடங்களே பட்டியலிடப்பட்டுள்ளன. (வ)

# கைவிடப்பட்ட தங்கூசி வலைகள் மீட்பு

வலி.தென்மேற்கு, ஜூன் 23

கிளிநொச்சி மாவட்டத்தில் வலைப்பாடு கடற்கரையில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வலைப்பாடு கடற்கரையில் நீண்டகாலமாக தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற அதிகாரிகள் வலைப்பாடு கடற்கரையில் கைவிடப்பட்ட நிலையில் தேடுவாரற்று இருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளைக் கைப்பற்றித் திணைக்களத்தில் வைத்துள்ளனர்.

அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட வலைத் தொகுதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-115)

# கனகராயன்குளம் கமநல சேவை நிலையம் இன்று ஒப்படைப்பு

## பொலிஸ் நிலையத்தின் பெரும்பகுதி பெரியகுளத்துக்கு

மாங்குளம், ஜூன் 23

கனகராயன்குளத்தில் வவுனியா வடக்கு பிரதேசத்தின் கமநலசேவை நிலையம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைபவரீதியாக ஒப்படைக்கப்படவுள்ளதாக கமநலசேவை நிலையத்தின் கனகராயன்குள பெரும்பாக உத்தியோகத்தர் பி.யூட் ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.



கமநலசேவை நிலையத்தின் தோற்றம்

கடந்த காலத்தின் போரின் போது இந்தக் கமநல சேவை நிலையத்தில் கனகராயன்குளப் பகுதிக்கு பொறுப்பான பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு சிவில் நிர்வாகம் நடைபெற்று சுமார் 4½ வருடங்களின் பின்னரே இந்தக் கமநல சேவை நிலையம்ஒப்படைக்கப்படவுள்ளது.

கனகராயன்குளத்தில் அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பெரும்பகுதி தற்போது பெரிய குளப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு சில பகுதிகள் கமநல சேவை நிலையத்திலேயே இயங்கவுள்ளதுடன் பெரிய குளத்தில் அமைக்கப்பட்டுவரும் பொலிஸ் நிலையத்தின் வேலைகள் பூர்த்தி அடையும்போது முற்றாக அங்கு இடமாற்றம் செய்யப் படுவதுடன் கமநல சேவை நிலையத்தின் செயற்பாட்டுக்கு இடையூறு வழங்காது தாம் செயற்படுவதாகவும் கனகராயன் குளப் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்துள் ளார்.

கமநல சேவை நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ள வாகனங்கள், மரங்கள் மற்றும் இதர பொருள்களையும் இன்று பிற்பகல் 3 மணிக்கு முதல் அகற்ற வேண்டும் என்றும் கனகராயன்குள கமநல சேவை நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (வ-422)

# சட்ட விரோதமாக ஆமை கடத்தல்

## இருவருக்கு ஆள்பிணை

வலி.தென்மேற்கு, ஜூன் 23

நாச்சிக்குடாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் வாகனத்தில் ஆமையைக் கடத்தி வந்த இருவரைத் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான், வாகனத்தை நீதிமன்றப் பாதுகாப்பிலும் ஆமையை நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் மூலம் கடலில் விடுமாறும் அறிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் நாச்சிக் குடாவிலிருந்து வாகனத்தில் ஆமையைக் கடத்திச் சென்ற இருவர் ஜெயபுரம் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர். ஆமையையும் வாகனத்தையும் கைப்பற்றிய பொலிஸார் இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போதே நீதிவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

நீதிவானின் அறிவுறுத்தலுக்கமைய அதிகாரிகள் ஆமையைப் பொறுப்பேற்று கிளாலி கடற்பிரதேசத்தில் விட்டுள்ளார்கள். (வ-115)

# தன்னைத்தானே தாக்கினாராம் ஜாதிக பல சேனாவின் தலைவர்

## அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது பொலிஸ்



கொழும்பு, ஜூன் 23

ஜாதிக பல சேனாவின் தலைவரும் மஹியங்கனை பிரதேச சபையின் உறுப்பினருமான வட்டரக்க விஜித தேரர் தனக்குத் தானே தாக்கிக் கொண்டுள்ளார் என்று கூறுகின்ற பொலிஸார், பொய் முறைப்பாட்டைப் பதிவு செய்து பொலிஸாரைத் தவறாக வழி நடத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வட்டரக்க விஜித தேரர், பாணந்துறை பிரதேசத்தில் வீதிக்கு அருகில் தாக்குதலுக்கு உள்ளாகி விழுந்து கிடந்த நிலையில் அண்மையில் மீட்கப்பட்டார். இதன் பின்னர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், இனந்தெரியாத நபர்கள் தன்னை கடத்திச் சென்று தாக்கிய பின்னர், குறித்த இடத்தில் கைவிட்டுச் சென்றதாக பொலிஸாரிடம் கூறியிருந்தார்.

சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் வட்டரக்க விஜித தேரரின் உடலில் காணப்பட்ட காயங்கள் அவரால் ஏற்படுத்தப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. விஜித தேரர், தனக்கு காயத்தை ஏற்படுத்திக் கொண்ட பின்னர், அவரது உறவினர் ஒருவர், அவரை பாணந்துறை ஹிரண பிரதேசத்தில் கொண்டு வந்து விட்டுச் சென்றதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.- என்று பொலிஸார் கூறுகின்றனர்.

வட்டரக்க விஜித தேரர், பொது பல சேனா அடிப்படைவாத பௌத்த அமைப்புக்கு எதிராக வெளிப்படையாக பேசி வந்தவர். அவ்வாறானதொரு நிலையிலேயே அவர் காயங்களுடன் மீட்கப்பட்டு காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். (ற)

# இலங்கை தமிழருக்கு அதிகாரங்கள் தேவை

## அதை இந்தியா பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றது 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்'

புதுடில்லி, ஜூன் 23

இலங்கைத் தமிழர்களுக்கு அதிக அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு, இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் மேலும் கூறியிருப்பதாவது,

கடந்த காலங்களில் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை இந்தியா வலியுறுத்தி வந்தது. ஆனால் கடந்த ஒரு தசாப்தமாக இந்தியாவின் வலியுறுத்தல்களை எந்த ஒரு நாடும் பின்பற்றாத நிலையே காணப்படுகிறது. இலங்கையிலும் இந்தியாவுக்கு இதே நிலைமை காணப்படுகிறது. இந்தியாவின் ஸ்திரமற்ற வெளிவிவகார கொள்கையே இதற்கு காரணம்.

ஆனால் புதிய பிரதமர் நரேந்திர மோடி இந்த நிலைமையை மாற்றி அமைப்பார் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

இந்தநிலையில் இலங்கை தொர்டர்பில் கொள்கை வகுக்கப்படும் போது, தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை பெற்றுக் கொடுக்கவும் இந்தியா முன்னிற்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (வ)

# இலங்கையர் குறித்த வழக்கு இந்திய புலனாய்வு பிரிவுக்கு

சென்னை, ஜூன்.23

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ புலனாய்வு பிரிவைச் சேர்ந் தவர் என்ற சந்தேகத்தில் சென்னையில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட இலங்கையர் தொடர்பான வழக்கு, இந்திய தேசிய புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய, பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்து, இந்த அனுமதியை தேசிய புலனாய்வு பிரிவு பெற்றுக் கொண்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதனை தமிழ் நாட்டு பொர்லிஸார் மறுத்துள்ளனர்.

இந்த வழக்கு இன்னும் தங்களின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாவும், மாநில அரசசு இதுதொடர்பில் எந்த அறிவுறுத்தலையும் வழங்க வில்லை என்றும் தமிழ் நாட்டு பொலிஸ் தெரிவித் துள்ளது.

கண்டி பகுதியைச்சேர்ந்த ஷகீர் ஹூசைன், கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி சென்னையில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் இருந்து பல கோடி ரூபா போலி நாணயத் தாள்கள் மீட்கப்பட்டன (வ)

# சிவப்பு சந்தன மரங்கள் மீட்பு

சென்னை, ஜூன் 23

இலங்கை உட்படப் பல நாடுகளுக்கு சட்டவிரோதமாக அனுப்புவதற்கு தயாராக இருந்த சிவப்பு சந்தன மரங்களை இந்திய சுங்க புலனாய்வு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.


இவ்வாறு சென்னை துறைமுகத்தில், கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் 60 தொன் சந்தன மரங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் பெறுமதி 27 கோடி இந்திய ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இவை கப்பல்களில் அனுப்பி வைக்கப்பட இருந்தன என்று கூறப்படுகின்றது.

இவை கிரனைட் மற்றும் தரி உற்பத்திகள் என்று தெரிவித்து, கப்பல் கொள்கலன்களில் ஏற்றப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# முறிந்து வீழ்ந்தது அரச மரம்



உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள சாரநாத் புத்தர் மடத்தில் உள்ள, 83 வருடங்கள் பழமையான அரச மரத்தின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் அதிகாலை முறிந்து விழுந்துள்ளது. அதனால் மடத்தின் சுற்றுச்சுவரின் ஒரு பகுதி மற்றும் ஆறு தர்ம சக்கரங்கள் உடைந்துள்ளன. 2,600 ஆண்டுகளுக்கு முன், புத்த கயாவில் அமைந்துள்ள, போதி மரத்தின் அடியில் புத்தருக்கு ஞானம் பிறந்தது. பின் இந்த மரத்தின் ஒரு கிளை இலங்கையில் உள்ள புத்த மடத்தில், நடப்பட்டு வளர்க்கப்பட்டது. பின்னர் இலங்கையில் இருந்து இந்த மரத்தின் ஒரு கிளையைப் புத்த துறவியான அநாகாரிக தர்மபால, 1931ஆம் ஆண்டு சாரநாத்தில் உள்ள 'மூல்கந்த குடி விஹார்' புத்த மடத்தில் நட்டார் என்று வரலாறு கூறுகின்றது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து சாரநாத் வரும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள், இந்த புனித மரத்தை வலம் வருவதை, தங்களது தர்மமாகக் கொண்டு உள்ளனர். (ற)

# மேற்கு நாடுகளுடனேயே உறவாடி இருப்பேன் நான்

## ஞானசார தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 23

"நான் ஜனாதிபதியாக இருந்தால் மேற்கத்தேய நாடுகளுடன் நல்லுறவைப் பேணி இருப்பேனே தவிர, முஸ்லிம் நாடுகளுடன் இல்லை" - இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபல சேனாவின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

"இலங்கை அரசின் வெளிநாட்டு கொள்கை சரியானது இல்லை. முஸ்லிம் நாடுகளுடன் நல்லுறவை பேணி வருகிறது. அதற்கு பதிலாக மேற்குலக நாடுகளுடன் சிறந்த உறவை பேணி வந்திருந்தால் தற்போது மனித உரிமைகள் சார்ந்த பல்வேறு விடயங்களில் சிக்கலை சந்தித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது."- என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

# கடலில் மூழ்கி முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடலில் நீராடிய 84 வயது முதியவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வேலணையில் நடந்துள்ளது. சம்பவத்தில் மானிப்பாய் ,வீதி ஓட்டுமடத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் நடராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது உறவினர் இருவருடன் கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது அவர் ஆழமான பகுதிக்குச் சென்றபோது நீரில் மூழ்கி மூர்ச்சையடைந்து விட்டார் என்றும், அங்கு நின்றிருந்த பொலிஸார் அவரை உடனடியாகக் கரை சேர்த்து, வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்து விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ந-4)

# இலங்கையை இனவாத நாடாக்க சர்வதேசம் முயற்சி செய்கின்றது

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஜூன் 23

இலங்கையை இனவாத நாடாகவும், இங்குள்ளவர்களைக் காட்டுமிராண்டிகளாகவும் சித்தரிப்பதற்கே சர்வதேச சமூகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. பௌத்த தேரர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் தவறான பரப்புரைகள் காரணமாக சர்வதேச சமூகம் காவிகளைக் கண்டாலே காறித்துப்பும் நிலை ஏற்படலாம் - இவ்வாறு கவலைவெளியிட்டுள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

தனது அமைச்சின் கீழ் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை வழங்கும் திட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"சிங்கள பௌத்தர் என்பது ஒழுக்க சீலமற்ற காட்டு வாழ்க்கையை கொண்ட சாதியெனவும், சிறுபான்மை இன மக்களை தமது இரும்புச் சப்பாத்தின் காலடியில் போட்டு மிதித்து அழித்தொழிக்கும் மிருக வெறி கொண்ட சமூகமென உலகுக்குக் காட்டுவதே அவர்களின் நோக்கமாகும்

தற்போதைய சமூக வலைத்தளங்களில் எல்லாம் பௌத்த தேரர்கள் கையில் தடியுடன் நிற்கும் புகைப்படங்களே பதிவேற்றப்படுகின்றன.

இந்த நிலை தொடர்ந்தால் பௌத்த பிக்கு ஒருவர் காவியுடை அணிந்து வெளிநாடுகளுக்கு செல்லமுடியாது விடும். காவியுடை சர்வதேச மட்டத்தில் மதிப்பிழந்து, கண்டவுடன் காறித்துப்பும் நிலைக்குத் தள்ளப்படும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பன்னல பள்ளி மீது தாக்குதல்?

கொழும்பு, ஜூன் 23

குருணாகல் மாவட்டத்தில் உள்ள இப்பாகமுவ - பன்னல பள்ளி வாசல் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலால் பள்ளிவாசலின் ஜன்னல், கதவு கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பள்ளிவாசலுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



பதுளை அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் உரையாடுகிறார். அமைச்சர்கள் டிலான் பெரேரா, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# ஒரு லட்சம் தொன் அரிசி இறக்குமதி

கொழும்பு.ஜுன் 23

சந்தையில் அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்த சில வியாபாரிகள் முயற்சி செய்வதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, விரைவில் ஒரு இலட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சந்தையில் அரிசி விலை உயர்வதைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு அரிசி இறக்குமதி செய்ய முடிவு செய் யப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ச. தொ. ச தலைவருக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ச-22)

# சோபித தேரருக்கு ஆதரவு இல்லை

## ஜே.வி.பி. கட்சி அறிவிப்பு

கொழும்பு.ஜுன் 23



விஜித ஹேரத்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மாதுளுவாவே சோபித தேரருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான பேச்சுக்கு எமது கட்சி எந்த வகையிலும் தயாரில்லை என்று ஜே. வி. பியின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பாக மாதுளுவாவே சோபித தேரருடன் நடைபெற்ற பேச்சுக்களில் ஜே. வி. பி. கலந்து கொண்டது.

எனினும் அதில் சோபித தேரர் பொதுவேட்பாளராக போட்டியிட்டால், அதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் எந்த கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சோபித தேரர் தலைமையிலான நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்புடன் இணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க தயாராக ஜே. வி. பி. உள்ளது என்று அவர் கூறினார்.

சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து தன்னை பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு கோரினால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடத் தயாராக இருப்பதாக மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# எரிபொருள் கொள்வனவு நாங்கள் செய்யவில்லை

கொழும்பு.ஜுன் 23

மூன்றாம் தரப்பு ஊடாக ஈரானிடம் இருந்து இலங்கை எரிபொருளைப் பெறுவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது என்று அரசு தெரிவித்துள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடையை மீறி இலங்கை ஈரானிடம் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்து வருவதாக அந்தச் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருந்தது.

ஈரானிடம் இருந்து பெறும் எரிபொருளை மலேசியா அரசு இலங்கைக்கு வழங்கி வருகிறது என்று அமைச்சர் கெஹலிய கூறியதாக ரொய்டர் செய்தித்தளம் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்த செய்தி முற்றிலும் பொய்யானது என்று தெரிவித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, அந்தச் செய்தியை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை மீறி ஈரானுடன் பொருளாதார ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டால், அது இலங்கைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச)

# குழப்பத்துக்குக் காரணம் அனைத்துலக சக்திகளே

## இவ்வாறு கூறுகிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு.ஜுன் 23

அனைத்துலக சக்திகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் ஒருங்கிணைந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் போன்று சகோதர உணர்வுடன் செயற்பட வேண்டும்.

> “ சட்டத்தை மீறும் எவராக இருந்தாலும் அவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மோசமான சூழலைப் புரிந்து கொண்டு, நாட்டில் சமூகங்களுக்கு இடையில் சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

எவரையும் சட்டத்தைக் கையில் எடுக்க அனுமதிக்கக் கூடாது என்று பொலிஸாருக்கும், படையினருக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

சட்டத்தை மீறுபவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதனை அதிகாரிகள் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்-என்றார். (ச)

# சைபர் தாக்குதலுக்கு உள்ளான அரசின் இணையத்தளங்கள்

கொழும்பு.ஜுன் 23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இணையத்தளம் உள்ளிட்ட இலங்கை அரசின் பல அதிகாரபூர்வ இணையத்தளங்கள் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகி செயலிழந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அளுத்கம, பேருவளைப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்தே, ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இணையத்தளம் சைபர் தாக்குதலால் முடக்கப்பட்டது என்பதை, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் தற்போது அது செயற்படத் தொடங்கியுள்ளது. இன்று திங்கட்கிழமை தொடக்கம் பதிவேற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த சில நாள்களாக நடத்தப்பட்ட சைபர் தாக்குதல்களின் மூலம், ஜனாதிபதி, திறைசேரி, பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றின் இணையத் தளங்கள் முடக்கப்பட்டன என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திறைசேரி இணையத்தளமும் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது. (ச)

# ஆள்கடத்தல் பட்டியலில் இணைந்தது இலங்கை

## மூன்றாவது தடவையாகவும்

*கொழும்பு.ஜுன் 23*

*ஆள்கடத்தல் தொடர்பில் கண்காணிக்கப்பட வேண்டிய நாடுகள் வரிசையில் இலங்கையின் பெயரை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் இணைத்துள்ளது.*

*ஆள்கடத்தல் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் வருடாந்தம் வெளியிடும் அறிக்கையில், இந்த சட்டவிரோத நடவடிக்கையை தடுப்பதற்கு தேவையான குறைந்தபட்ச ஏற்பாடுகளையேனும் இலங்கை அரசு முழுமையாகச் செயற்படுத்தத் தவறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*எனினும் ஆள்கடத்தல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக இலங்கை விசேட நடவடிக்கைகள் சிலவற்றை ஆரம்பித்துள்ளது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை ஆரம்பித்தாலும் ஆள் கடத்தலைத் தடுப்பதற்காக இலங்கை மேற்கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சியில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.*

*இந்த நடவடிக்கையைத் தடுப்பது தொடர்பில் வரையறுக்கப்பட்ட வகையிலேயே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)*

# இலங்கையில் ஜிகாதிகள் செயற்படுவதாக எந்தத் தகவலும் இல்லை

## சம்பிக்கவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் ருவன் வணிகசூரிய

கொழும்பு.ஜுன் 23



ருவன் வணிகசூரிய

இலங்கையில் ஜிகாதிகள் செயற்படுவதாக எந்த தகவலும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஜிகாதிகள் செயற்படுவதாகவும், அங்கு ஜிகாதிகளை அமெரிக்கா ஊக்கப்படுத்துவதாகவும், அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை இராணுவத்துக்கு எந்த உறுதியான ஆதாரமும் கிடைக்க வில்லை.

நாடுமுழுவதிலும், இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு செயற்பட்டு வருகிறது.

இத்தகைய குழுக்கள் செயற்படுவது குறித்து ஆதாரங்கள் ஏதும், கண்டுபிடிக்கப்படவில்லை.

தற்போது இலங்கை மீதான அனைத்துலக அழுத்தங்களுக்குக் காரணமாக இருக்கும் பிரிவினைவாத, புலம்பெயர் தமிழர்கள் என்ற பொது எதிரி குறித்து மட்டுமே நாம் கவலைப்பட வேண்டும்.

வெளிநாட்டு அரசுகள், அனைத்துலக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் அவர்கள், தமது பிரதான இலக்கான தனிநாட்டை அடைய முயற்சிக்கின்றனர்.

இதனை விட்டு இல்லாத ஒரு விடயம் குறித்து நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை.

இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மத, இன பேதங்களின்றி வாழ்ந்து வருகிறோம்-என்றார். (ச)



திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபர் அலுவலகம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை அதிகாலை இனம்தெரியாத நாசகார சக்திகளால் தீ வைக்கப்பட்டுள்ளது. (ச)

## தாக்குதலுக்குள்ளான உணவகத்தை பார்வையிட்டார் கிழக்கு முதலமைச்சர்

திருகோணமலை.ஜூன் 23

திருகோணமலை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாகவுள்ள உணவகமொன்று தாக்குதலுக்குள்ளான நிலையில், அந்த உணவகத்தை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு பார்வையிட்டுள்ளார்.

முதல்வருடன் திருகோணமலை தலைமையக பொலிஸ் பரிசோதகர் தயானந்த பிரபாத்தும் உணவகத்தைச் சென்று பார்வையிட்டார். இந்தச் சம்பவத்தின்போது ஊழியர்களின் கையடக்கத் தொலைபேசி கமராவில் பதிவுசெய்யப் பட்ட காட்சிகளையும் முதல்வர் பார்வையிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை கைதுசெய்யப்பட்ட 8 பல்கலைக்கழக மாணவர்களும் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவர்களை இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

> ஊழியர்களின் கையடக்கத் தொலைபேசி கமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகளையும் முதல்வர் பார்வையிட்டார்.

## தாக்குதலை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### கண்டன பிரேரணையைக் கூட நிறைவேற்ற முடியாத நிலை

மூதூர்.ஜூன் 23

அளுத்கம, பேருவளை பகுதிகளில் பெரும்பான்மையினரால் நடத்தப்பட்ட வெறியாட்டத்தைதடுக்க அரசு நடவடிக்கை எடுக்காததது ஏன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அளுத்கம சம்பவத்தின் போது அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. பலர் காயப்படுத்தப் பட்டுள்ளனர்.

கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசல்கள் சேதப் படுத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பை வழங்க முடியாத அரசுக்கு முஸ்லிம் அமைச்சர்கள் ஆதரவு வழங்கி பாதுகாப்பதன் அர்த்தம் என்ன என்று புரியவில்லை.

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்கள் மீதான வன்முறைகளுக்கு கண்டனப் பிரேரணை நிறைவேற்ற முடியாத அளவுக்கு முஸ்லிம் தலைவர்கள் அரசை பாதுகாப்பதன் நோக்கம் இது வரை புரியவில்லை- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# ஆலயங்களை ஆக்கிரமிக்க முற்படுவதை ஏற்கமுடியாது

### இந்துக் குருமார் சங்கம் தெரிவிப்பு

திருகோணமலை.ஜூன் 23

திருகோணமலையில் ஆலயங்களை ஆக்கிரமிக்க முற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று மூதூர்ப் பிரதேச இந்துக்குருமார் சங்கத்தின் தலைவர் இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

மூதூர்ப் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் ஏற்பாட்டால் சிவபுரம், விபுலானந்தர் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்துக்களுக்குரிய ஆலயங்களை ஆக்கிரமிக்க முற்படுவதும் அதில் மாற்று வணக்கஸ்தலங்களை அமைப்பதற்கான முயற்சிகளும் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தச் செயற்பாட்டை நிறுத்துவதற்கு மாணவர்கள் ஆன்மிகத்தின் வழியில் சிறந்த புத்திஜீவிகளாக வரவேண்டும். இன்று சமயத்தை சந்தர்ப்பவாதத்துக்காக மாற்றுகின்றனர்.

கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபனத்தின் சிவன் ஆலய புனரமைப்புப் பணிகளுக்கு தொல்பொருள் திணைக்களம் தடைவிதித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தும் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்கவில்லை - என்றார். (ச-40)

> இந்துக்களுக்குரிய ஆலயங்களை ஆக்கிரமிக்க முற்படுவது தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

## கரடியனாறில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு.ஜூன் 23

மட்டக்களப்பு , கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குசலானமலைக் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒரு தொகுதி ஆயுதங்களை மீட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் பயிர்ச் செய்கைக்காக காட்டுக்கு தீ வைத்த போதே குறித்த ஆயுதங்கள் வெளிப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ச)

## கடும் வறட்சியால் வற்றுகின்றன குளங்கள்

### படுவான்கரையில் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு

மட்டக்களப்பு.ஜூன் 23

மட்டக்களப்பு, படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள சிறிய குளங்கள் கடும் வறட்சியால் வற்றி வருகின்றன.

அதனால் படுவான்கரையில் அமைந்துள்ள பல கிராமங்களில் தற்போது குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருவதால் கால் நடைகளும் குடி தண்ணீருக்காக அலைந்து திரிகின்றன.

படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள கோவில் போரதீவுக் குளம், பெரியபோரதீவுக் குளம், பழுகாமத்தில் அமைந்துள்ள குளம், வெல்லாவெளிக் குளம் போன்றவை தண்ணீரின்றி முற்றாக வற்றியுள்ளன.



வற்றி வரும் குளங்களில் ஒன்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடும் வெயிலுடன் கூடிய உஷ்ணம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-32)


## கண்ணீர் அஞ்சலி



**பஞ்சரத்தினம் சண்முகதாசன்**

*(உரிமையாளர் - காவேரி சில்க்ஸ், பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்)*

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிங்கம்ஸ் பார்மஸி**
**கோண்டாவில்**

(49265) (45.6)



## மரண அறிவித்தல்



**அருட்சகோதரர் தேவதாஸ் விமலதாசன்**

*(அருள் ஆச்சிரமம் - செபமாலைத் தாசர் சபை)*

**21.06.2014 அன்று காலமாகிவிட்டார்**

அன்னார் சங்குவேலி வடக்கு, டச்சுறோட், உடுவிலைச் சேர்ந்தவரும், காலஞ்சென்றவர்களான தேவதாஸ் - அன்னப்பிள்ளை கிருபை தம்பதியரின் மகனும், அமலநாயகம் (வேவி), மங்களராக்கினி, சென்மராக்கினி மற்றும் காலஞ் சென்றவர்களான சூசைநாயகம் (அதிபர்), கிறகோரி குணதாஸ் ஆகியோரின் சகோதரரும், பொன்றோஸ், அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான தேவபாலன், செல்வராசா, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (23.60.2014) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் இரங்கல் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதைத் தொடர்ந்து அச்சுவேலியில் அமைந்துள்ள செபமாலை மாதா ஆச்சிரமத்திற்கு (அன்பகம்) எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பி.ப.3.00 மணிக்கு இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு அங்கு நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தே.அமலநாயகம் (வேவி) சகோதரன்.
தொ.பே: 077 408 0806/077 922 7721 (49262)(12)(6)

# பொதுபல சேனா குறித்த அறிக்கை அடுத்த வாரம்

கொழும்பு.ஜூன் 23
பொதுபல சேனா குறித்த அரசின் நிலைப்பாடு தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது. அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்கள் மற்றும் பொது பல சேனா அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அமைச்சரவையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த விடயங்கள் தொடர்பாக இலங்கை சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்பில் ஜனாதிபதி விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் பதற்றமான நிலைமையை ஏற்படுத்தும் சில நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக நேரடியாக நிதியுதவிகள் கிடைத்து வருவதாக கூட்டத்தில் தகவல் வெளியிடப்பட்டது.

வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் நிதியுதவியைப் பெற்று வரும் ஒரு நபரின் பெயரும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த சகல விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு அரசு அடுத்த வாரம் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுபல சேனா அமைப்புக்கு அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளிடம் இருந்து நிதியுதவிகள் கிடைத்து வருகின்றன என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அதனை பொதுபலசேனா அமைப்பு மறுத்திருந்தது. பொது பல சேனா அமைப்பின் பிக்குமாருக்கு வங்கிளில் ஆயிரம்கோடிரூபாவுக்கும்மேல் பணம் வைப்பில் இருப்பதாக அந்த அமைப்புக்கு எதிரான பிக்கு ஒருவர் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



துணுக்காய், ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். (ச-18)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சிரமதானம்

அளவெட்டி, ஜூன் 23
சூழல் சுற்றாடல் தினத்தையொட்டி, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகத்தின் ஒரு பகுதியை இலங்கை இராணுவத்தின் பலாலி, படைத் தலைமையகத்தின் - மாவிட்டபுரம் படைமுகாமைச் சேர்ந்த படையினர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இதேவேளை குறித்த மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள கழிவு நீர் வழிந்தோடும் பிரதான வாய்க்காலில் காணப்பட்ட பற்றைகள் செடிகளை வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சுத்தம் செய்தனர். படையினரும் இதில் கலந்து கொண்டனர். (வ-36)

# தொடர்கின்றன வன்முறைகள்

## தெஹிவளை பொலிஸ் நிலையம் அருகிலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையம் மீது தாக்குதல்

கொழும்பு.ஜூன் 23
தெஹிவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தக நிலையம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

தெஹிவளை ஹில் வீதியில் அமைந்துள்ள பெண்களுக்கான ஆடை நிலையம் ஒன்றே நேற்று கற்கள் வீசித் தாக்கப்பட்டுள்ளதுடன், கட்டடத்துக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வர்த்தக நிலையம் அமைந்துள்ள இடத்தில் இருந்து நூறு அடிக்கும் குறைவான தூரத்தில் தெஹிவளை பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இந்தச்சம்பவம்தொடர்பாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார்.

இதேவேளை பாணந்துறை, சரிக்கமுல்லை மற்றும் வரக்காபொல பிரதேசத்திலும் முஸ்லிம்களின் குடியிருப்புகள் மீது கற்கள் வீசித் தாக்கப்பட்டுள்ளதுடன், குடிபோதையில் இனவாதிகளின் நடமாட்டமும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை வேரவத்த ஆற்றுக்கரையில் வாள், கத்திகளுடன் இனவாதிகள் திரண்டு வந்து முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்குத் தயாரான தகவல் கிடைத்தவுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அந்தப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறான இனவாதிகளின் நடவடிக்கை காரணமாக தினம் தினம் முஸ்லிம்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் அரச தரப்போ முஸ்லிம்களின் அச்சத்தைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப்பதிலாக, அறிக்கைகளுடன் மாத் திரம் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளது என்று முஸ்லிம் தரப்பினர் குமுறுகின்றனர். (ச)

# சிகரெட்டுகள் கடத்திய நபர்களுக்கு மறியல்

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்றுக்கு சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை நாளை செவ்வாய்க்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுக்களை சட்டவிரோதமான முறையில் லொறி ஒன்றில் கொண்டுசெல்லும்போது, ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


# பாப்பரசர் பயணிக்கின்ற இடங்களை பார்க்க குழு

## அடுத்த வாரம் பாதுகாப்பு அதிகாரிகள் வருகை

கொழும்பு.ஜூன் 23
பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸின் பாதுகாப்பு அதிகாரிகள் அடுத்த வாரம் அளவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

பாப்பரசரின் 15 மெய்ப் பாதுகாவலர்களே இவ்வாறு இலங்கை வரவுள்ளனர்.

பாப்பரசர் பயணம் செய்ய உள்ள இடங்கள் மற்றும் கலந்து கொள்ளவுள்ள நிகழ்வுகள் தொடர்பில் அவதானிக்கும் நோக்கில் மெய்ப்பாதுகாவலர்கள் இலங்கைக்கு வருகின்றனர்.



பாப்பரசர்

பாப்பரசரின் இலங்கை வருகையின் போது முதலாவதாக நீர்கொழும்புக்குச் செல்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அளுத்கம சம்பவத்தைப் போன்று நாட்டில் எதுவும் நடக்கக்கூடாது

## விமலஜோதி தேரர் தெரிவிப்பு

அளுத்கம சம்பவமே இறுதியானதாக இருக்க வேண்டும். நாட்டில் இதுபோன்று இனியொரு சம்பவம் இடம்பெற அனுமதிக்க முடியாது; அனுமதிக்கவும் கூடாது என்று தெஹிவளை நெதிமால பௌத்த கலாசார நிலையத்தின் அதிபர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா உட்பட ஏகாதிபத்தியவாதிகள் எமது நாட்டின் மீது அழுத்தம் செலுத்துவதற்கு இத்தகைய சம்பவங்கள் துணையாக அமையும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற அனுமதிக்க முடியாது. சாசனம், சம்புத்த ஜயந்தி மன்றத்தின் வேலைப்பளுவால் தாம் பொது பல சேனாவின் செயற்பாடுகளில் இருந்து கடந்த எட்டு மாதங்களாக விலகி உள்ளோம். வேகமான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் காலகட்டத்தில் இனங்களுக்கு இடையில் சக வாழ்வை சீர்குலைக்க மதவாதிகளுக்குச் செயற்பட இடமளிக்கமுடியாது. 2500 ஆண்டுகளுக்கும்மேல் எழுத்துமூலவரலாறு கொண்ட பௌத்தர்கள் வாழும் ஒரே நாடு இலங்கையாகும். சகல இனத்தவரும் ஐக்கியமாகவும், சக வாழ்விலும் ஈடுபட்டுள்ளனர். மதவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிறு குழுவினரால் தேசிய ஒற்றுமைக்கும் சக வாழ்வுக்கும் தடை ஏற்பட ஒருபோதும் இடமளிக்க முடியாது. அளுத்கம பகுதியில் நடந்த சம்பவங்களின்போது பல அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்ட முறையை நான் அனுமதிக்கமாட்டேன்-என்றார். (ச)

# அஸாத் சாலியை கைதுசெய்த பொலிஸார் ஏன் ஞானசாரரை கைதுசெய்யவில்லை?

## கேள்வியெழுப்புகிறது ஆங்கில செய்தித்தாள்

கொழும்பு.ஜூன் 23
வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்பட்டதாக குற்றஞ்சாட்டி அஸாத் சாலியைக் கைதுசெய்ய முடியுமானால் ஏன் அதே தவறைச் செய்த கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைதுசெய்ய முடியாது என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று நாட்டின் இறைமையைக் குறிவைத்து வன்முறைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு தார்மீக பொறுப்பேற்று இலங்கை பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோன் பதவி விலக வேண்டும் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கோரியுள்ளது.

அளுத்கமவில் பொதுபல சேனா பேரணி நடத்திய பின்னரே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன.

முன்னர் பௌத்த பிக்கு ஒருவர் முஸ்லிம் ஒருவரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்தே இந்தப் பேரணி நடத்தப்பட்டது. எனினும் பௌத்த பிக்கு தாக்கப்படவில்லை என்று வைத்திய அறிக்கைகள் உறுதிப்படுத்தின. எனினும் ஊடகங்களுக்கு கருத்துரைத்திருந்த இலங்கையின் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன், குறித்த பௌத்த பிக்கு தாக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இது பொறுப்பற்ற தமது பதவிக்கு அப்பாற்பட்ட குற்றமாகும். எனவே இலங்கக்கோன் பதவியை விட்டு விலகவேண்டும். இதேவேளை அளுத்கமவில் பொதுபலசேனா பேரணி நடத்தியபோது அதற்கு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

இதற்கு காரணத்தைக் கேட்டபோது அமைதியான பேரணி ஒன்றுக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், குறித்த பேரணி, முஸ்லிம்களுக்கு எதிரான சுலோகங்களை தாங்கிய பேரணியாக இருந் தது. எனவே அதனை அமைதிப் பேரணி என்று எவ்வாறு கூறமுடியும் என்று ஆங்கில செய்தித்தாள் கேள்வி எழுப்பியுள்ளது.

வன்முறையைத் தூண்டும் வகையில் நடந்தார் என்று அஸாத் சாலியைக் கைது செய்ய முடியுமானால் ஏன் அதே காரணத்துக்காக கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்ய முடியாது என்று ஆங்கில செய்தித் தாள் கேட்டுள்ளது.

அதேவேளை அளுத்கம வன்முறைச் சம்பவங்களில் யாரும் கொல்லப்படவில்லை என்று உண்மைக்குப் புறம்பான தகவல்களை அவ்வப்போது பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ளார். இதேவேளை முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான நோலிமிட் தீக்கிரையாக்கப்பட்ட போது இலங்கக்கோன் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. எனவே பொறுப்பற்ற செயல்களுக்காக இலங்கக்கோன் பதவி விலக வேண்டும் என்று ஆங்கில செய்தித்தாள் தமது கோரிக் கையை நியாயப்படுத்தியுள்ளது. (ச)

# நல்லூர் பிரதேச செயலக மட்ட இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம், ஜூன் 23
நல்லூர் பிரதேச செயலக பிரதேச இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

**பாலர் பிரிவு - கவிதைப்பாடல்**
முதலாம் இடம் - ஜெ.அபிரா (ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்), இரண்டாம் இடம் -ச.கேதுசன் (செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை), மூன்றாம் இடம் - த.நிருஷிகா (இந்து மகளிர் கல்லூரி)

**கையெழுத்துப் போட்டி**
முதலாம் இடம் - ச.கஜலக்சி (செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை), இரண்டாம் இடம் - பா.கௌசிகன் (ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்), மூன்றாம் இடம் - ச.கலைநயன் (ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), க.கவிந்தியா (ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்)

**கனிஷ்ட பிரிவு - கவிதை எழுதல்**
முதலாம் இடம் - இ.தவசீலன் (கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி.), இரண்டாம் இடம் - ஶ்ரீ.தேனுகா (இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - வி.கேனிகா (இந்து மகளிர் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**
முதலாம் இடம் - பி.தர்மிகா (அரியாலை ஶ்ரீ பார்பதி வித்தியாலயம்), இரண்டாம் இடம்- ச.சஜந்தினி (அரியாலை ஶ்ரீ பார்பதி வித்தியாலயம்), மூன்றாம்இடம்-சி.டனிஸ்ரன் (பெரிய புலம் மகா வித்தியாலயம்)

**கவிதை பாடல்**
முதலாம் இடம்-உ.புவிநிலா (இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ப.லாஞ்சனா (இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - வ.குயிலினி (கோண்டாவில் இராம கிருஷ்ண ம. வித்தியாலயம்)

**சிரேஷ்ட பிரிவு - கவிதை எழுதுதல்**
முதலாம் இடம் - ச.அர்ச்சனா (இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - மு.பிரதாயினி (இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்- த.சபிதா (இளைய தம்பி இந்து வித்தியாலயம்)

**கட்டுரை**
முதலாம்இடம்-செ.சேந்தன்(இந்துக்கல்லூரி), இரண்டாம் இடம் - தே.தேவநிலா (அரியாலை ஶ்ரீ பார்பதி வித்தியாலயம்)

**கவிதை பாடல்**
முதலாம் இடம் - க.சரணியா (கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வித்தியாலயம்), இரண்டாம்இடம்-இ.நிரஞ்சினி(இளைய தம்பி இந்து வித்தியாலயம்), மூன்றாம் இடம் - க.கஜதாயினி (இந்து மகளிர் கல்லூரி)

**பாடல் நயத்தல்**
முதலாம் இடம் - க.பிரியதர்சினி (இந்து மகளிர் கல்லூரி)

**பாடலாக்கம்**
முதலாம் இடம் -திருமதி குணேஸ்வரி ரகுநாதன்(15/5 மாரியம்மன் வீதி), இரண்டாம் இடம் - திருமதி சத்தியகலா அருணகிரிநாதன் (56/1 இந்துக் கல்லூரி ஒழுங்கை), மூன்றாம் இடம் - க.சிவராசா (நந்தாவில், ஒழுங்கை கொக்குவில் கிழக்கு)

**நாட்டார் கலை கற்றல்**
முதலாம் இடம் - சு.சிவராசா (நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு), இரண்டாம் இடம் - தி.திலீபன் (ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு), மூன்றாம் இடம் - வே.சிவகுமாரன் (ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு)

**இலக்கிய விபரணம்**
முதலாம்இடம்-திருமதிகணேஸ்வரி தனமூர்த்தி (அரியாலை), இரண்டாம் இடம் - சி.சிவதாசன் (நொத் தாரிஸ் வீதி அரியாலை), மூன்றாம் இடம் - க.சிவராசா (கொக்குவில்)

**சிறுகதை**
முதலாம் இடம் - க.சிவராசா (கொக்குவில் கிழக்கு), இரண்டாம் இடம் - திருமதி ஆரணி முகுந்தன் (8/3 புகையிரத வீதி, நீராவியடி), மூன்றாம் இடம் - தி.திலீபன் (கோண்டாவில் கிழக்கு)

**கவிதை**
முதலாம் இடம் - க.ரட்ணேஸ்வரன் (5, பெந்தெகோஸ் ஒழுங்கை கண்டி வீதி), இரண்டாம் இடம் - திருமதி கலாராணி ரஜிவன் (கலட்டி வீதி கோண்டாவில் மேற்கு), மூன்றாம் இடம் -திருமதி ஆரணி முகுந்தன் 8/3 (ரயில் நிலைய வீதி நீராவியடி), சி.சிவதாசன் (45, நொத்தாரிஸ் வீதி அரியாலை)

**சிறுவர் கதையாக்கம்**
முதலாம் இடம் - திருமதி சத்தியகலா அருணகிரிநாதன் (56/1 இந்துக் கல்லூரி ஒழுங்கை), இரண்டாம் இடம் - திருமதி ஆரணி முகுந்தன் (8/3 புகையிரத வீதி நீராவியடி), மூன்றாம் இடம்- க.சிவராசா (நந்தாவில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு), சி.சிவதாசன் (45,நொத்தாரிஸ் வீதி அரியாலை). (வ-7)

# பொதுச் சபைக் கூட்டம்

கொழும்புத்துறை, ஜூன் 23
யாழ்.பல நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
யாழ்.பல நோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பொதுச் சபைக் கூட்டம் தற்போதைய தலைவர் தலைமையில் நடைபெறும்.
குறித்த கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்கள் கிளைக் குழுக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இம்மாதம் 15 ஆம் திகதி இயக்குநர் தெரிவுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக முன்னர், அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் பிற்போடப்பட்டு தற்போது நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த பல வருடங்களாக நியமன இயக்குநர் சபை மூலம் சங்கம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-135-51)

# பார்வை இழந்த பல்கலை மாணவிக்கு மடிக்கணினி

## இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் வழங்கியது

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் சமூக வேலைத்திட்டத்தில் முல்லைத் தீவு பகுதியில் இரு கண் பார்வையை இழந்த பல்கலைக்கழக மாணவியின் கல்விக்காக 70 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினி வழங்கப்பட்டது.
போரால் இரு கண் பார்வையை முழுமையாக இழந் தும் ஜி.சீ.ஈ உயர் தர பரீட்சை யில் சித்தி பெற்று பல்கலை கழகத்துக்கு தெரிவாகி இருக்கும் முல்லைத்தீவைச் சொந்த இடமாக கொண்ட வறுமை மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த, வத்சலா எனும் மாணவிக்கு இந்த மடிக்கணினி வழங்கப் பட்டது.



கல்வியங்காடு மாற் றுத் திறனாளிகள் நிலைய மான கருவி அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க சமூக சேவையாளர் சிவதாஸ் மாணவிக்கான கணினியை வழங்கி வைத்தார். (வ-14)

# கிராம சேவையாளர்களுக்கு கடமைப் பிரிவுகள் அறிவிப்பு

வடமராட்சி, ஜூன் 23
பருத்தித்துறை பிரதேச செய லர் பிரிவுக்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச் சால் புதிதாக நியமிக்கப்பட்ட 10 கிராம சேவை அலுவலர்களுக்கு, அவர்களின் கடமைக் கான பிரிவுகளை பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் வழங்கியுள்ளார். நியமனம் பெற்ற கிராம சேவையாளர்களும், அவர்களுக்கான பிரிவுகளும் வருமாறு:-
என்.நதியா(பருத்தித்துறை தெற்கு), கே.ஶ்ரீசங்கா (தும் பளை கிழக்கு), எஸ்.சிவாஜினி (புலோலி மேற்கு), ரி.விமல்சினி (புலோலி தென்மேற்கு), ரி.அரவிந்தராம் (புலோலி கிழக்கு), எஸ்.ஜெயதுயா (தும்பளை வடக்கு), ரி.கவிதா (வல்வெட்டித்துறை வட மேற்கு), ஆர்.பாலலோஜினி (பொலிகண்டி தெற்கு), எஸ்.விஜிதா (அல்வாய் வட மத்தி), ஆர்.அபரஞ்சிநாதன் (அல்வாய் வடக்கு)- நியமனம் பெற்ற புதிய கிராம சேவையாளர்களுக்கு யாழ். மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகங் களில் ஏற்கெனவே பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. (வ-173)

## பாதிக்கப்பட்ட நிலையில் கால்நடை வளர்ப்பாளர்

தெல்லிப்பழை, பன்னாலை, விளான், அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளில் கால் நடைகளை நம்பி குடும்பம் நடத்தும் கால்நடை உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை பெய்யாததால் புற்கள் வறண்டு காணப்படுகின்றன. வழமையாக மேய்ச்சலுக்காக கால்நடைகளைக் கொண்டு சென்றுவிடும் இடங்கள் விளையாட்டு மைதானம் போன்று காட்சியளிக்கின்றன. நீர் நிலைகளும் வற்றிக் காணப்படுவதால் சில குளங்களில் கால் நடை கள் நீரை அருந்த முடியாத நிலையில் தவிக்கின்றன.
இதனால் கறவை மாடுகளில் எதிர்பார்த்தளவு பாலைப் பெற முடியவில்லை. இதன் காரணமாக தமது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்க்ள் கூறுகின்றனர். இந்த நிலையில் இங் குள்ள கால் நடை வளர்ப்போர் சங்கங்கள் உரிய அதிகாரிகளுடன் பேசி, கால்நடைத் தீவனத்தை மானிய விலையில் பெற்றுத் தரவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-36)

**வெளிவந்துள்ளது**
இம்முறை தோற்றவுள்ள உயர்தர மாணவர்களுக்கான சித்திரப்பாட மாதிரி வினாத்தாள் விடைகளுடன் கொழும்பு-யாழ்.முன்னணி ஆசிரியர்களின் O/L மாதிரி வினாத்தாள் விடைகளுடன்
(எமது வெளியீடுகள் 20%-40% வரை விலைக்கழிவு)
**வின்லான்ட் புத்தகசாலை**
235, ஆஸ்பத்திரி வீதி, (49270 (4.3.6.)
யாழ்ப்பாணம். 077 441 2518

**வேலைவாய்ப்பு**
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல 'றெஸ்ற்ரோறன்ற்' இற்கு
Cook (குக்) தேவை.
* சைனிஸ், இந்தியன் உணவு வகைகள் தயாரிக்கத் தெரிந்தவர்.
* கொத்து சிற்றுண்டி வகைகள் தயாரிக்கத் தெரிந்தவர்.
திறமை உள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு.
தொடர்பு: 075 724 6060

**காணி விற்பனைக்கு**
அபூபக்கர் வீதி தொடக்கத்திலிருக்கும் 'இலவத்துறை' என்று அழைக்கப்படும் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(49116) (12.3.6)
தொடர்பு: 077 789 3125

**பெயர்மாற்றம்**
'செல்வராஜகிரி,' யாழ்ப்பாண வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கராஜா சிறி அருள்காந்தமூர்த்தி ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தங்கராஜா சிறிமூர்த்தி என பெயர் மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகிறேன்.
தங்கராஜா சிறிமூர்த்தி



அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய 2014 ஜய வருஷ மகோற்சவம்
24.06.2014 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.07.2014 வியாழக்கிழமை தேர் உற்சவமும் 04.07.2014 வெள்ளிக் கிழமை தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.
அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(49272)(4.6) பரிபாலனசபையினர்.




**கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்**
இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

**VACANCIES in Vavuniya**
**Course Counselors** (Female)
**Computer Instructor** (Full Time)
**Branch Managers** (3 Places)
19 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த(சா.த) அடிப்படை தகைமையுடயவராக இருப்பதுடன் பின்வருவனவற்றுள் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.
01.Office Application
02.Graphics
03. Programming
04. Web designing
05. Multimedia
06. Accounting .
Auto CAD, Maya, 3D Studio Max, மற்றும் Computer Hardware கற்பிக்க கூடிய தகுதியும் முன்னனுபவமும் உடயவர்கள் (Part Time or Full Time)
எமது வவுனியா, மாவட்ட கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்,
**Apply before 30.06.2014**
TECHNO WORLD Studios (Pvt) Ltd
அனுப்பவேண்டிய முகவரி
The Human Resource Manager
TECHNO WORLD Studios (Pvt) Ltd
No.06, Station Road, Karappankadu, Vavuniya.

# குடிதண்ணீர்த் தொட்டியை சுத்தமாக வைத்திருங்கள்

மக்கள் கோரிக்கை



பாசி பிடித்த நிலையிலுள்ள குடிதண்ணீர்த் தொட்டி.

குருநகர், ஜூன் 23
யாழ். மத்திய கல்லூரியின் முன்பாகச் செல்லும் வீதியில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் குடிப்பதற்காக குடிதண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு முன் பாக உள்ள தொட்டி பாசி பிடித்து அசிங்கமாக துப்புரவு செய்யப்படாமலுள்ளது. இந்தக் குடிதண்ணீர்க் குழாயில் வரும் நீர் சுத்தமாக உள்ள போதிலும் இந்தத் தொட்டி அசிங்கமாகக் காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.
எனவே நீரை வழங்குவதுடன் மட்டுமல்லாமல் இந்தத் தொட்டியின் சுத்தத்தையும் உரியவர்கள் கவனிப்பது அவசியம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (வ-51)

# டெங்கால் பாதிக்கப்படுவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

## பற்றைக் காணிகளை துப்புரவாக்குமாறு உரிமையாளர்களுக்கு அறிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 23
தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பற்றைக் காணிகளை துப்புரவாக்குமாறு கடிதங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸாரும் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய பகுதிகளில் துப்புரவு செய்யப்படாமல் பற்றைகளாகக் காணப்படும் காணிகள் டெங்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடியவை என்று குறிப்பிட்டு பற்றைகளை 14 நாள்களுக்கு துப்புரவு செய்யுமாறு காணி உரிமையாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அறிவிப்புப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

> "சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 58 பேர்.

குறித்த காலக்கெடுவுக்குள் பற்றைகள் துப்புரவு செய்யப்படாவிடின் உரிமை அல்லது பராமரிப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்றுமுன்தினம் வரை 58 பேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் தென்னிலங்கைப் பகுதியில் கல்வி, தொழில் மற்றும் வியாபாரம் ஆகிய நோக்கில் தங்கியிருந்தவர்கள் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
இந்த விவரத்தின் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் வழங்கிய ஒத்துழைப்பின் பயனாக டெங்கு ஏற்படுவது பெருமளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மீண்டும் உருவாகாமல் தடுக்க அனைத்து மக்களும் தமது குடியிருப்புக்கள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# இழப்பீட்டுத் தொகையை செலுத்த இழுத்தடிப்பு

## சாரதிக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, ஜூன் 23
பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தாமல் காலத்தை இழுத்தடித்த சாரதியை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
ஏ-9 வீதி புனரமைப்பு வேலைகள் இடம்பெற்ற வேளையில் வீதியில் சென்று கொண்டிருந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற வீதி மேற்பார்வை அதிகாரி ஒருவரை மோதியதில் அவர் அந்த இடத்தில் உயிரிழந்தார். இது தொடர்பான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்று இழப்பீட்டுத் தொகையாக ஒரு லட்சம் ரூபா வழங்குமாறு சாரதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் உத்தரவிட்டது.
இழப்பீட்டுத் தொகையை இதுவரை செலுத்தவில்லையென இறந்தவரின் குடும்பத்தினர் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வழக்குத் தவணைக்கு வந்த சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். பொது நூலகத்தில் புதிய புத்தகங்களின் கண்காட்சி சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கண்காட்சிக் கூடத்தை யாழ். மாநகர சபையின் பிரதம கணக்காளர் புஷ்பநாதன் லோகேந்திரன் திறந்து வைத்தார். பாலர் பாடசாலைகள் மற்றும் பெரியோர்கள் பார்வையிட்டனர். சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி ஒரு வாரம் வரை நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-106-135)

# குடிதண்ணீர் குழாய்க்கு தொட்டி அமைக்கப்படும்

*சாவகச்சேரி உழவர் சந்தையில்*

தென்மராட்சி, ஜூன் 23
சாவகச்சேரி பொதுச் சந்தையின் உழவர் சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் குழாயைச் சுற்றி தொட்டியொன்றை அமைத்து வெளியே சிந்தும் தண்ணீரை வடி காலுக்கு செல்ல ஏற்பாடு செய்யவும்.
இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் கூட்டத்தில் உறுப்பினர் ந. திருக்குமரன் தனிநபர் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார்.
குழாய்க்கு உரிய வடிகால் வசதி இல்லாததால் அந்தப் பகுதியில் தண்ணீர் தேங்கி நின்று அங்கு செல்லும் மக்கள் வழுக்கி விழுவதை நேரில் காணக்கூடியதாக உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
சபைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் மதிப்பீடு தயாரித்து ஒரு வாரத்தில் குறித்த இடத்தில் நீர்தேங்காது சீர் செய்யப்படும் என்று சபைத் தலைவர் இ. தேவசகாயம் பிள்ளை உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# காக்கைதீவு இறங்குதுறையில் கூறுவிலை மண்டபம்

வலி. தென்மேற்கு, ஜூன் 23
வலி. தென்மேற்குப் பிரதேச கடற்றொழிலாளர்களின் நலன் கருதி காக்கைதீவு இறங்குதுறையில் பொது நிறுவனத்தின் நிதி உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் மீனவர்களின் வசதிக்கேற்றவாறு கூறுவிலை மண்டபம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, கூழாவடி, உயரப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 1,200 இற்கும் அதிகமான மீனவர்கள் காக்கைதீவு இறங்குதுறையைப் பயன்படுத்தி வருகின்றனர்.
கூறுவிலை மண்டபம் அமைக்கப்படாததால் ஆரம்பகாலம் தொட்டு கடற்கரையில் தரையில் வைத்து கடலுணவுகள் கூறி விற்பனை செய்யப்பட்டு வந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் இந்தத் துறைக்கு வந்து கடலுணவுகளைக் கொள்முதல் செய்வதில் ஈடுபட்டு வந்தனர்.
மீனவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து கடந்த இரு வருடங்களுக்கு முன்பு பல லட்சம் ரூபா செலவில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூறுவிலை மண்டபமும் முழுமை பெறாததால் மண்டபத்துக்குள் மீண்டும் தரையில் வைத்தே கடலுணவுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (வ-115)

# பரு. நகர சபையால் புனரமைக்கப்படும் மயானம்

கரணவாய், ஜூன் 23
பருத்தித்துறை நகரசபையினரால் வெளிச்ச வீட்டுக்கு அருகிலுள்ள இந்து மயானம் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
கீட்லரிப்பால் சேதமான மயானத்தின் பகுதியை கழிவு மண் இட்டு செப்பனிடப்பட்டது. அத்துடன் சடலங்கள் எரியூட்டுவதற்கு கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.
இதுவரை காலமும் சுற்றுமதில் இன்றிக் காணப்பட்ட குறித்த மயானத்துக்கு தற்போது மூன்று பக்கங்களுக்கும் சுற்றுமதில் அமைக்கப்பட்டு வாசலில் வளைவும் அமைக்கப்பட்டுள்ளது.



புனரமைக்கப்பட்ட மயானம்

இதேவேளை - புனரமைப்புக்குப் பின் அந்த மயானத்தில் தகனம் செய்யப்படும் ஒவ்வொரு சடலத்துக்கும் ஆயிரம் ரூபா கட்டணமாக நகர சபைக்குச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு ஒரு தடவையில் இரண்டு சடலங்கள் எரிப்பதற்கேற்ற ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்துடன் மயானத் தேவைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய கிணறு ஒன்றும் நகரசபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (வ-108)

# சிறிய கண் வலை, கூட்டு தொழிலை தடை செய்க

## யாழ். குடா கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடுவோர் கோரிக்கை

குருநகர், ஜூன் 23
யாழ். குடாக்கடற் பகுதியில் சிறிய மீன்கள் மற்றும் சிறிய இறால் கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படுவதால் சிறிய கண் வலை, கூட்டுத் தொழில் ஆகியவைகளை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.
இந்த வகைத் தொழிலை மேற்கொள்வதால் மீன் பெருக்கம் அழிவடைந்து வருகிறது. இன்னும் சில வருடங்களில் கடலுணவுகளை பிடிக்க முடியாத நிலை உருவாகலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.
குருநகர் பாஷையூர் மீன் சந்தைகளில் சந்தைப்படுத்தப்படும் கடலுணவுகளில் பெரும்பாலானவை திரளி, ஒட்டி, அகழி, மண்ணா, முரல், கயல் மீன் ஆகிய சிறிய மீன்களும், கூனி இறால்களுமே காணப்படுகின்றன. மேலும் ஆழ்கடல் மீன் வர்க்கங்களான பாரை, திருக்கை ஆகியவை குறைந்த அளவே சந்தைப்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. (வ-51)

# இனிய பாலைப்பழம் சந்தையில்



பாலைப்பழம்

இயற்கை தந்த இனிய பழமாகிய பாலைப்பழப் பருவகாலம் ஆரம்பித்ததை அடுத்து வன்னியில் இருந்து பாலைப்பழம் யாழ். குடாநாட்டின் சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்துள்ளது. ஒரு சுண்டு பழம் 30 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (ஓ-135)



நடந்து செல்லும் மாணவர்கள்

# தினமும் மாணவர்கள் நடந்து வரும் அவலம்

## அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு

கிளிநொச்சி.ஜூன் 23

கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு தினமும் மாணவர்கள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து வருகின்றனர்.

மீள்குடியேற்றத்தின் பின்பு பாடசாலைக்கு நடந்து வரும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது என்று பாடசாலை புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

மணியங்குளம், அம்திபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், முக்கொம்பன், கண்ணகிபுரம், ஸ்கந்தபுரம் மேற்கு, அக்கராயன் கிழக்கு எனப் பல இடங்களிலிருந்து மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

எனவே நடந்து வரும் மாணவர்களுக்கு உதவி அமைப்புக்கள் சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-18)

# இந்திய வீட்டுத் திட்ட தெரிவில் பாரபட்சம்

## உருத்திரபுரம் மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி.ஜூன் 23

கிளிநொச்சி, உருத்திரபுரம் கிழக்குப் பகுதியில் இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதால் பல பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளோம் என்று அவர்கள் கூறினர்.

> நீண்ட காலமாக குடியிருக்காதவர் கள் மற்றும் வேறு இடங்களில் குடியிருப்பவர்கள், ஏற்கெனவே வீடுகளையுடையவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராம அலுவலர் பிரிவில் நீண்ட காலமாக குடியிருக்காதவர்கள் மற்றும் வேறு இடங்களில் குடியிருப்பவர்கள், ஏற்கெனவே வீடுகளையுடையவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் போரால் பாதிக்கப்பட்ட எமக்கு இதுவரை எந்த வித வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-55)

# சைக்கிள் திருட்டு மன்னாரில் அதிகரிப்பு

மன்னார்.ஜூன் 23

மன்னார் மாவட்டத்தில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குஞ்சுகோவிலுக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களில் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் கரையில் விட்டுச் செல்லும் சைக்கிள்களே இவ்வாறு திருடப்பட்டு வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் மீன் பிடிப்பதற்குச் சென்ற சின்னக்கடை கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் சைக்கிளும் திருடப்பட்டுள்ளது.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (ச-415)



பூநகரி, சங்குப்பிட்டி தொடக்கம் பரமன்கிராய் வரையான ஏ-32 வீதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ச-18)

# ஏற்றுக்காடு கிராமத்துக்கு அடிப்படை வசதியில்லை

## குடிதண்ணீரைக்கூட பணம் கொடுத்து வாங்கும் அவலம்

மன்னார்.ஜூன் 23

மன்னார் மாவட்ட சின்னக்கடை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஏற்றுக்காடு கிராமத்துக்கு இன்றுவரை மின்சாரமோ, குடிதண்ணீர் வசதியோ இல்லாமையால் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

தற்போது குடியேற்றப்பட்ட இந்தப் பிரதேச மக்கள் கூலித் தொழில், கடற்றொழில் போன்றவற்றை மேற்கொள்பவர்களாக இருப்பதால் பொருளாதார ரீதியிலும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஏற்றுக்காடு-காட்டுவெளிக் கிராம வீதிகள் சீரான முறையில் செப்பனிடப்படாமல் காணப்படுகின்றன.

இந்தக் கிராமங்களுக்கான வீதிகள் மணல் வீதிகளாகக் காணப்படுவதால் சுட்டெரிக்கும் வெயிலில் இந்த வீதி களில் பயணிக்கும் சிறார்கள் முதல் வயோதிபர்கள் வரை அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர். குடிதண்ணீரைக் கூட பணத்தைச் செலுத்தியே அயற் கிராமங்களிலிருந்து பெற்று வருகின்றோம் என்று மக்கள் கூறினர்.

> உயர்தர வகுப்பு மாணவர்கள் மின் வெளிச்சம் இன்மையால் கைக்குப்பி விளக்குகளிலேயே கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் மின் வெளிச்சம் இன்மையால் கைக்குப்பி விளக்குகளிலேயே கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

எனவே இந்தக் கிராமத்துக்கான அடிப்படை வசதிகளைச் செய்துதர சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-415)

# வன்னேரிக்குள முதியோர் இல்லத்தை புனரமைக்க ரூ.30 மில்லியன் தேவை

## தலைவர் இராசநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி.ஜூன் 23

கிளிநொச்சி .வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தை முழுமையாகப் புனரமைப்பதற்கு சுமார் முப்பது மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது என்று அதன் தலைவர் தி. இராசநாயகம் தெரிவித்தார்.

கடந்த கால போரால் சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த முதியோர் இல்லத்தை புனரமைத்து தருமாறு பலரும் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

அதனையடுத்து இந்த முதியோர் இல்லத்தைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தலைவர் தெரிவித்தார்.

இதற்கு முப்பது மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது. அதற்கான நிதியுதவியை இந்து மாமன்றம், மாகாண சபை ஆகியவற்றிடம் கோரியுள்ளோம் என்று அவர் கூறினார்.

ஆனால் இதுவரை எந்த நிதியுதவியும் கிடைக்கவில்லை.

இரண்டு மில்லியன் ரூபா நிதி கிடைக்குமிடத்து ஒரு பகுதியை மாத்திரம் புனரமைத்து அதனை இயங்க வைக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-55)

# அடிப்படை வசதிகளின்றி இயங்குகிறது சந்தை

முல்லைத்தீவு.ஜூன் 23

முல்லைத்தீவு, மந்துவில் பொதுச் சந்தை புனர்நிர்மாணம் செய்யப் பட்டு திறந்து வைக்கப்பட்ட போதும் அதன் அடிப்படை வசதிகள் எவையும் இது வரை பூர்த்தி செய்யப்படவில்லை.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள மந்துவில் பொதுச் சந்தை புதிதாக புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது.

அதன் அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்று மக்கள் கூறினர்.

இந்தச் சந்தைக்கு குடிதண்ணீர் வசதி கள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை. அதனால் உரிய முறையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

எனவே, சந்தைக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர சம்பந் தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# பழையமுறிகண்டி ஆற்றுப் பகுதியில் காடழித்து மணல் அகழ்வு

## சூழலியல் ஆபத்து ஏற்படும் அபாயம்

துணுக்காய்.ஜூன் 23

துணுக்காய் பழைய முறிகண்டி ஆற்றுப் பகுதியில் தினமும் மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற நாளிலிருந்து காடு அழிக்கப்பட்டு மணல், கிரவல் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன என்றும்-துணுக்காய் பிரதேச செயலர், முல்லைத்தீவு அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரிடம் முறைப்பாடு தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

> மணல் அகழ்வை தடுத்து நிறுத்தா விட்டால் சூழலியல் ஆபத்தை எதிர் நோக்க நேரிடும்.

பழைய முறிகண்டி கிராமத்தின் ஆற்றுப் பகுதியில் இடம் பெறும் மணல் அகழ்வை தடுத்து நிறுத்தாவிட்டால் சூழலியல் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, இந்த மணல் அகழ்வு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)



பழைய முறிகண்டியில் மணல் அகழ்வு

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்



எமது சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் கருவில் தொடங்கி கல்லறை வரை தொடர்ந்து கொண்டே செல்கின்றது. பெண்களுடைய உரிமைகள் பால்நிலைச் சமத்துவம் இன்மையால் சமூக பொருளாதார கலாசார அரசியல் ரீதியாக ஒடுக்கப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் பாரபட்சம் இன்றி சரிநிகர் சமத்துவம் உடையவர்களாக வாழ வேண்டும். எது எப்படி இருப்பினும் இன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்பது கண்கூடு.

அந்த வகையில் தான் இன்றைய காலப்பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குடும்பத்துக்கு குடும்பம் அதிகரித்த வண்ணமே உள்ளன. அதன் விளைவுகளும் அதிகமாகவே காணப்படுகின்றது.

கணவன் மனைவி மத்தியிலும் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியிலும் அதிகமான வன்முறைகள் காணப்படுகின்றன. வன்முறை என்பது மனிதன் தனது அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி தன்னைச் சார்ந்த மக்களையும் தன்னைச் சாராத மக்களையும் தனது ஆளுமைக்குள் உட்படுகின்ற போது ஏற்படுவதாகக் கூறுகின்றோம்.

குறிப்பாக வன்முறை ஒன்று ஏற்படுமிடத்து அதனால் பெரிய விளைவுகளையும் தாக்கங்களையும் நாம் எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறு ஏற்படுகின்ற போது தான் குடும்பத்துக்குள்ளும் அதன் வெளியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இந்த வன்முறையைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். குறிப்பாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான தகராறுகள் மற்றும் தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தகராறுகள் மற்றும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தகராறுகள் பெரிய வன்முறைகளுக்கும் கொலைச்சம்பவங்களுக்கும் வித்திடக் கூடியன.

குறிப்பாக வன்முறைகள் என்பது மனிதனானவன் தன்னுடைய ஆளுமையைப் பிரயோகித்து தனது குறிக்கோளையோ அல்லது தனது வைராக்கியத்தை நிலை நிறுத்தவோ முற்படுகின்ற போது தோற்றம் பெறுபவை ஆகும்.

வன்முறை பொதுவாகத் தோற்றம் பெறுவது வீடுகளிலேயே ஆகும். வீட்டு அங்கத்தவர்கள் தங்களுக்கு உடல் மற்றும் உள மற்றும் மன ரீதியாக தாக்கம் ஏற்படுகின்ற போது அதனை வன்முறைகளாகவும் தகாத செயல்கள் மூலமாகவும் தமது குடும்ப அங்கத்தவர்களிடம் பிரயோகிக்கின்ற போது அதனை நாம் வீட்டு வன்முறை என்ற விடயத்துக்குள் வரையறை செய்யலாம்.

மேலும் குறிப்பாக குடும்ப வன்முறைகளில் அத்தியாவசியமான சில விடயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் சொத்துடைமைகள் என்பன கிடைக்காத சந்தர்ப்பங்களில் குறித்த நபர்களுக்கிடையில் அதிருப்தி நிலை ஏற்பட்டு அது பெரிய சிக்கலைக் கொடுக்கின்ற போது அதனை வன்முறையாகக் கொள்ளலாம்.

அதாவது வறுமை மற்றும் அழுத்தம் மற்றும் சமூக பண்பாட்டுக் காரணிகளின் காரணமாகவும் இலங்கை மட்டுமன்றி உலகிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்படுகின்றன இலங்கையைப் பொறுத்தவரையில் பெருந்தோட்ட துறைகளிலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்களும் வீட்டு வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. ஆகவே தான் இன்றைய சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதன் மூலமும் ஏனைய வன்முறைகளை ஒழிப்பதன் மூலமும் நாம் அமைதியான வாழ்க்கையை வாழ முடியும் என்பது உண்மையாகும்.

அதே போன்று பெண்களுக்கு எதிரான வன்முறை அல்லது துஷ்பிரயோகம் என்னும் போது பெண்கள் சமூகத்தில் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொள்ளுகின்றனர். எந்த அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாகும். இதனை விளங்கிக் கொள்ளுமுன் வன்முறை என்பதன் முழு அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அகராதிகளின் படி பாதிக்கப்படக் கூடிய மோசமான தாக்கம், காயம், உணர்வுகளின் பாதிப்பு, இப்படிப் பல விடயங்கள் தரப்பட்டுள்ளன. எனவே வன்முறை என்றவுடன் வெறும் உடல் தொடர்பான புறத்தாக்கம் என்று மட்டும் நினைக்காமல் அகத்தைப் பாதிக்கக் கூடிய நீண்ட கால நிரந்தர மனக் காயங்களைத் தரக் கூடிய உளவியல் ரீதியான தாக்கங்களையும் மனதில் கொள்ள வேண்டும்.


உடல் தாக்கங்கள், அடிதடி, மாமியார் கொடுமை, பலாத்காரம், கட்டாய உடலுறவுக்கு வற்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல் எனப் பல பிரச்சினைகள், கற்பழிப்புப் போன்றவை அடிப்படையான வன்முறைகளாகக் காணப்படுகின்றன. அத்தகைய பாதிப்புக்களின் சுவடுகள் உடலில் வடுக்களையும், மாறுதல்களையும் உருவாக்கக் கூடியன. அத்தோடு நில்லாமல் அவை மனதில் துயரத்தையும் உருவாக்கக் கூடியன.

உளவியல் தாக்கங்கள் பெண்களை அவமரியாதை செய்து அவர்களைப் பற்றி அவதூறு பேசி அவர்களின் உணர்வுகளைப் பாதித்து மனதைப் பாதிக்கின்ற செயல்களாகும். அத்தகைய பாதிப்புக்கள் பிறகு உடலை வருத்தும் நோயாகவும் மாறி விடுகின்றன. குறிப்பாக உடலில் அல்லது உளவியல் எந்த ரீதியில் பெண்கள் துன்புறுத்தப்பட்டாலும் பெண்ணின் உடலும் மனமும் பாதிப்படைகின்றன.

ஆதிக்க உணர்வுகளின் மிகையான செல்வாக்கினால் இன்றைய உலகில் இத்தகைய கொடுமைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய வன்முறைகளைப் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடுபவர்கள் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் தான். குறிப்பாக உளவியல் ரீதியான வன்முறைகளைப் பெண்கள் மீது பெண்களே அதிகமாகப் பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லலாம்.

அடையப்பட வேண்டிய இலக்குகள் தெளிவாக இருந்தும் கூட பெண்களின் மேம்பாடு எங்கோ தடைப்பட்டுக் கொண்டு இருப்பது தெளிவாக இருக்கின்றது. வழிகள் பல இருந்தும் கூட வாய்ப்புக்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் கண்கூடு. இந்தத் தடைக்குக் காரணம் என்ன என்பதும் கேள்வி யாகும்.

ஆணாதிக்கம் அதிகமாக இருக்கும் சமுதாயத்தில் பெண்ணிய மேம்பாட்டிற்கென தனியான கவனம் செலுத்துவது என்பதுசிக்கலானதே. ஆனால் எந்தவொரு விடயத்திலும் அது பெண்களால் முடியாதுஎன்றமுடிவுக்கு வருவதைத் தவிர்க்கலாம் இல்லையா?



அந்த அடிப்படையில் பெண்களின் வேலை வாய்ப்புக்கள் இரண்டாம் இடத்துக்கே நிர்ணயப்படுத்தப்படுகின்றன. கல்வி, திறமை, அனுபவம் அனைத்துமே பால் அடிப்படையில் பதவிகள் தீர்மானிக்கப்படுகின்ற காரணத்தினால் பெண்களுக்கு சிறந்த நிலைகளை எட்டுவதற்குப் பயன்படாமல் போகின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் தாண்டி முன்னுக்கு வரக் கூடிய பெண்கள் சந்திக்கும் சிக்கல்கள் அதிகமாகும். பணிப் பாகுபாடு காட்டி பெண்களை அச்சுறுத்தி உடல் ரீதியிலான தாக்கங்களை உண்டு பண்ணக்கூடிய ஆபத்துக்களை பெண்களின் மீது திணிக்கிறார்கள்.

பணியில் ஆணும் பெண் ணும் சரியாக சமமாக நடத்தப் படாமை பெண்கள் செய்யும் பணிகளில் குற்றங்கண்டு பிடித்தல், பெண்களின் நடத்தையைத் தூற்றுதல், ஊதியத்தில் சமமின்மை போன்ற பல தீமைகள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றன. இவை அனைத்துமே பெண்களை மனவியல் ரீதியாகப் பாதிக்கின்றன. குறிப்பாகப் பெண்களைத் தரக்குறைவாகப் பேசும் கொடுமை பெரியளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெண்களை மட்டுமன்றி முழுக் குடும்பத்தையுமே பாதித்து விடக் கூடியன. குடும்பத்தகராறுகள் அதனால் ஏற்படும் வன்முறைகள் போன்றவை முழுக் குடும்பத்தையுமே குறிப்பாக குழந்தைகளை மிகவும் பாதித்து விடக் கூடியன. எனவே குடும்ப முன்னேற்றமே தடைப்படும் என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை எப்படிச் சமாளிப்பது என்பதைப்பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். இன்று பல நடைமுறைச் சட்டங்கள் பெண்கள் பாதுகாப்புக்கென உள்ளன. இவற்றை மீறி பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. பலாத்காரம் போன்றவற்றிற்கு கடுமையான தண்டனை முறைகளைப் பின்பற்ற வேண்டும். தண்டனை முறைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் அகற்றப்பட வேண்டும். இவை சரியாக இல்லாத காரணத்தினால் தான் பெண்கள் தொடர்பான முறையீடுகள் பொலிஸுக்கு அறிவிக்கபடாமலே மறைக்கப்படுகின்றன.

இவற்றின் விளைவாக பெண்கள் சொந்தத் தைரியத்தையும், துணிவையும் இழக்கின்றனர். வன்முறையின் விளைவாக அவர்கள் பல பாதிப்புக்களுக்கும் உள்ளாகின்றனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விசாரணை வெறும் கண்துடைப்பாக இருக்கலாகாது

பெரும்பான்மை சமூகங்களுக்கிடையில் சிறுபான்மை சமூகம் ஒன்று வாழும்படி நேர்ந்தால் அந்த சமூகத்தைப் பாதுகாத்துப் பேணுவது பெரும்பான்மை சமூகத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும். மக்கள் ஆட்சி என்பது சிறப்புற்று விளங்க இது அவசியமாகும்.

உலகில் தலைசிறந்த ஜனநாயகவாதியாகவும், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இருந்தவருமான பண்டிட் ஜவஹர்லால்நேரு இவ்விதமாக ஒருமுறை கூறியிருந்தார்.

பல்வேறு இனங்கள், மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் விரிந்தும் பரந்தும் கிடக்கின்ற ஒரு நாட்டின் மக்கள் தலைவரால் இப்படித்தான் பேசமுடியும்- பேசவும் வேண்டும்- பேசியபடி மக்களை வழிநடத்தவும் வேண்டும்-அவ்வாறு செய்தமையால்தான் அவர் அந்த நாட்டின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றும்கூட ஆட்சி முறையில் பல முன்மாதிரிகளை நிலைநாட்டியவர் என்று போற்றப்படுகின்றார். மிகச் சிறந்த உலகத் தலைவர்களில் ஒருவராகவும் மதிக்கப்பட்டார்.

அவ்வாறு சகல சமூகங்களாலும் புரிந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியத் தலைவர் என்று இந்த நாட்டில் எவரும் இருந்துள்ளார்களா என்பதற்குத் தகுதியான பதிலை கூறமுடியாமல் இருக்கிறது. இனிமேலாவது தோன்றுவார்களா என்பதையும் சொல்ல முடியவில்லை. அவ்வாறு தோன்றுவரெனின் எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் அதனைச் சுட்டிக்காட்டி எழுதுவார்கள். அதற்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்படி ஒருவர் தோன்றினால் இந்த நாடு சொர்க்க புரியாகிவிடும். இல்லையெனில் தொடர்ந்தும் இன்றைய நிலைதான் நீடிக்கும் என்று சொல்லத் தேவையில்லை. சுதந்திரம் கிடைத்ததில் இருந்து இந்த நாட்டில் எத்தனை விதமான கலவரங்கள், எத்தனை ஆயிரம் மக்கள் சாவு, இத்தனைக்கும் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் தமக்குரிய உரிமைகளைக் கேட்டார்கள் என்பதே பின்னணி.

மாபெரும் கொடிய போர் ஒன்று நடந்து பல்லாயிரக் கணக்கான உயிர்கள் கொன்றொழிக்கப்பட்டு போரின் இறுதியில் இடம்பெற்றுவிட்டதான போர்க் குற்றங்கள் மனித உரிமை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்திருப்பது தொடர்பாக ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் பணிமனையின் சர்வதேச விசாரணையொன்று நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகவிருக்கும் தறுவாயில், தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களுக்கெதிரான இனக் கலவரங்கள் வெடித்து நாட்டை திக்குமுக்காடச் செய்துள்ளன. இந்தக் கலவரங்களுக்கு யார் காரணம் என்பதைப் பற்றி பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. முஸ்லிம்களின் தலைவர்கள் சிங்கள தீவிரவாதத்தின் மீது குற்றஞ் சாட்டியுள்ள நிலையில் சிங்களத் தலைவர்களும், தீவிரவாதிகளும் முஸ்லிம்கள் மீதும் குற்றஞ்சாட்டிவருகிறார்கள். கலவரத்தைத் தூண்டியவர்கள் அதனால் ஒருபகுதி மக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாக வேண்டும் என்பதில் கவனமாக இருந்துள்ளார்கள். அப்படிப் பார்க்கும்போது முஸ்லிம் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வீடுகள், சொத்துக்கள், வணக்க ஸ்தலங்கள், தொழில் நிலையங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன; அழிக்கப்பட்டுள்ளன.

இங்கு ஒரு முக்கிய விடயம் கவனத்துக்குரியது. பெரும்பான்மை மக்களால் சூழப்பட்டுள்ள சிறுபான்மையோரே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸார் முதலில் சாக்குப் போக்குக் கூறிக்கொண்டு வேடிக்கை பார்த்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த மாதிரி குற்றச்சாட்டுக்கள் வேறு பல சந்தர்ப்பங்களிலும் தெரிவிக்கப்பட்டதுண்டு. அதனால் அது ஒரு பழக்கப்பட்ட விடயம்தான். முஸ்லிம் தலைவர்கள் அனைவருமே பொதுபல சேனாவின் கலகொட அத்தே ஞானசார தேரர் நிகழ்த்தியுள்ள உணர்ச்சிகளைத் தூண்டும்படியான பேச்சே கலவரங்கள் வெடிப்பதற்குக் காரணம் என்று தெரிவித்துள்ளார்கள். அந்தத் தேரரைக் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்றும் கோருகிறார்கள். அவர் ஒரு சிங்கள பௌத்த பிக்குவாக இருப்பதால் அவர்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு தயங்குவதாகத் தெரிகின்றது. அந்த நிலையில் வேறு ஒருவர் என்றால் நிலைமை வேறாக இருந்திருக்கும். எதுவானாலும் நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பாக விசார்ணை செய்வதற்கு உயர்மட்டக் குழுவொன்றை நியமிக்கவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

வழக்கம் போன்ற கிடப்பில் போடப்படும் விசாரணையாக இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நிவாரணமும் கிடைப்பதை உறுதி செய்வதாக இந்த விசாரணை இருக்க வேண்டும். இல்லையெனில் நீதியைக் கோரி அவர்களும் சர்வதேசத்திடம் செல்லும் நிலை ஏற்படலாம். அதன் விளைவும் நாட்டை இன்னும் அதல பாதாளத்தில் கொண்டுபோய் விடுவதாக அமைநதுவிடும் என்போம்.

கட்டுரை



# தீர்க்கமானதொரு கட்டத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள்

சேரலாதன்

கடும்போக்கு சிங்கள பௌத்த அமைப்பு ஒன்றுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான பகைமை உணர்வு அளுத்கம, பேருவளை ஆகிய இடங்களில் வன்முறைச் சம்பவங்களாக வெடித்துள்ளன. இறுதிப் போரில் தமிழர் தரப்பினர் முற்றாகவே தோற்கடிக்கப்பட்டதால் அவர்கள் இனிமேல் தலையைத் தூக்கவே முடியாது என்பதை உறுதி செய்து கொண்ட சிங்கள கடும் கோட்பாளர்களின் கவனம் மற்றொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்களின் பக்கம் திரும்பத் தொடங்கிவிட்டது.

முஸ்லிம் மக்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பரந்து வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிக அளவில் வாழ்ந்தாலும் சிங்கள மக்கள் வாழுகின்ற ஏனைய பிரதேசங்களிலும் அவர்கள் கணிசமான அளவில் வாழ்ந்து வருகின்றனர். அங்கு அவர்கள் வர்த்தக நடவடிக்கைகயில் ஈடுபட்டு வருவதையும் காண முடிகின்றது. பொதுவாகவே சகல வர்த்தக நடவடிக்கைகளிலும் அந்த மக்கள் ஈடுபடுவதைக் காண முடியும். ஆரம்பத்தில் பொதுபல சேனா என்ற கடும்போக்கு பௌத்த அமைப்பு முஸ்லிம்கள் நடத் தும் மாட்டு இறைச்சிக் கடைகள் மீது தனது பார்வையைப் பதித்தது.

> **நாம் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள், புத்தரின் போதனையைப் பின்பற்றுபவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் உண்மையான பௌத்தர்களாக இருந்து விட்டாலே போதும். இந்த நாடு அமைதிப் பூங்காவாகவும், செழிப்பு மிக்க தேசமாகவும் மாறிவிடும்.**

மாடுகளைக் கொல்வது பாவம். ஆகவே மாட்டிறைச்சிக் கடைகளே இந்த நாட்டில் இருக்கக் கூடாது என்பது இந்த அமைப்பினரின் வாதமாகும். முஸ்லிம்கள் நடத்தி வந்த ஓரிரு மாட்டு இறைச்சிக் கடைகளும் தாக்குதலுக்கு உள்ளாகின. ஆனால் தமது மதம் சார்ந்தவர்களைப் பார்த்து மாட்டு இறைச்சியை உண்பது பாவம். அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என இந்த அமைப்பினர் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. இதன் மூலமாக மாட்டு இறைச்சிக் கடைகளின் தேவை தானாகவே குறைந்து போயிருக்கும்.

எந்தவொரு நாட்டிலும் சிறுபான்மை இனம் வாழ்ந்து வருவது வழக்கமான ஒன்றுதான். ஆனால் அவற்றின் உரிமைகளை அந்தந்த நாடுகளின் அரசுகள் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும். மொழி, இனம், மதம் என்பவற்றின் அடிப்படையிலேயே பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரை மொழி ரீதியில் தமிழர்களும், மத ரீதியில் முஸ்லிம்களும் சிறுபான்மையினர் என்ற வரையறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இங்கு பெரும்பான்மையினராக வாழ்பவர்கள் சிங்கள மொழியைப் பேசுபவர்களாகவும், பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பௌத்த மதம் ஓர் இந்துவாகப் பிறந்து நோய், மூப்பு, இறப்பு ஆகிய இயற்கையின் நியதிகளைக் கண்டு தமது அரச வாழ்வைத் துறந்த சித்தார்த்தன் என்ற இயற்பெயரைக் கொண்ட கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது. அன்பு, அகிம்சை, சகிப்புத் தன்மை என்பன இந்த மதத்தின் அடிப்படைத் தத்துவங்களாகும். இந்த மூன்றும் ஒரு மனிதனை பாவங்கள் செய்வதிலிருந்து விலகிச் செல்ல வைக்கும் மகத்தான சக்தியைக் கொண்டுள்ளன. உண்மையான பௌத்தன் ஒருவன் அன்பே உருவானவனாகவும், அகிம்சையைக் கடைப்பிடிப்பவனாகவும், எதனையும் சகித்துக் கொள்ளும் உயர்ந்த குணத்தை உடையவனாகவும் விளங்குவான். அவனது மனதில் கோபம், வெறுப்பு, பழிவாங்கும் உணர்வு என்பன தலை தூக்க மாட்டா. ஆனால் இன்று இவையெல்லாம் எந்த அளவுக்குச் சாத்தியமாகின்றன என்பது எம்மைப் படைத்த ஆண்டவனுக்கே தெரியாத புதிராகக் காணப்படுகின்றன. ஆனால் இந்த மோதல்களின் பின்னணியில் பௌத்த தேரர் ஒருவரின் பெயர் பலமாக அடிபடுகின்றது.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிக் கதிரையில் அமரும் ஆட்சியாளர்களின் பிரதான மூலதனமாக இனவாதமே விளங்குகின்றது. இதை இந்த நாட்டின் சாபக்கேடு என்று கூடக் கூறலாம். சிறுபான்மை இனத்தவர்கள் தொடர்பாக பெரும்பான்மையின மக்கள் மத்தியில் வெறுப்பையும், பீதியையும் கிளப்பிவிட்டு அதில் குளிர்காய்வதையே இவர்கள் தமது வழக்கமாகக் கொண்டுள்ளனர். முஸ்லிம் மக்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் சிங்கள மக்களைவிடப் பெருமளவில் அதிகரித்துச் செல்வதாகப் புரளியொன்றும் தென்பகுதியில் கிளப்பிவிடப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் இந்த ஆபத்திலிருந்து தப்ப வேண்டுமானால் இயன்றவரை அதிகளவு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், இத்தகைய குடும்பத்தினருக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் எனவும் அரசின் உயர் தலைவர்களால் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. இந்த அறிவிப்பு சிங்கள மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இல்லை. ஆனால் ஏற்கெனவே பொருளாதாரச் சுமையால் அவதிப்படும் குடும்பங்கள் மேலும் அவலங்களை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை ஏற்படப் போகின்றது. ரஷ்யாவில் பிறப்பு வீதம் குறைவடைந்து காணப்பட்டதால் அதனை அதிகரிக்குமாறு மக்கள் ஊக்குவிக்கப்பட்டமை நினைவுக்கு வருகின்றது. ஆனால் அங்கு ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த மக்களுக்கு மட்டுமே இந்த அறிவிப்பு விடுக்கப்படவில்லை. சகல ரஷ்யர்களுக்கும் பொதுவானதாகவே அது காணப்பட்டது.

நாம் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள், புத்தரின் போதனையைப் பின்பற்றுபவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் உண்மையான பௌத்தர்களாக இருந்துவிட்டாலே போதும். இந்த நாடு அமைதிப் பூங்காவாகவும், செழிப்பு மிக்க தேசமாகவும் மாறிவிடும்.

அளுத்கம மற்றும் பேருவளையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜூலை மாத வன்செயல்களை நினைவுபடுத்துவதாக முஸ்லிம் தலைவர்கள் கூறியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. அந்தக் கறுப்பு ஜூலையில் தமிழர்கள் எதிர்கொண்ட பேரவலங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவை. அரசின் முழு ஆதர வுடன் மிகவும் கீழ்த்தரமான வகையில் அரங்கேற்றப்பட்ட அந்தக் கொடிய சம்பவங் கள் தமிழர்களின் மனங்களிலிருந்து என்றுமே அகற்றப்பட முடியாதவை. இன்று முஸ்லிம்கள் அதனை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே மாறி மாறி வரும் அரசுகளுக்கு ஆதரவு தெரிவித்து சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் மனப்பான்மைக்கு விடை கொடுக்கும் தருணம் முஸ்லிம் தலைமைகளுக்கு இப்போது வந்துவிட்டது. ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் அங்கத்துவம் வகித்தாலும் இன வாதத்தின் முன்னால் தாக்குப் பிடிக்க முடியாது என்ற உண்மையையும் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அநேகர் உணர்ந்து கொண்டும் இருப்பார்கள். தமது தனித்துவத் தைப் பேணி தம்முடன் ஒத்துழைக்க முன்வரும் உண்மையான சக்திகளுடன் கைகோர்ப்பதே முஸ்லிம்களின் இன்றைய முக்கிய தேவையாகும்.

# மகத்தான கல்விப் பணி ஆற்றும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

இ.தனம்

600 மாணவர்களையும் 28 ஆசிரிய வளங் களையும் கொண்டு இந்தப் பாடசாலை சிறப்புடன் இயங்கி வருகின்றது. தற்போதைய அதிபரான ந.கருணாகரனின் வழிநடத்தலில் பாடசாலை மேலும் வளர்ச்சியடைந்துவரும் நிலையில் 40 ஆம் ஆண்டு விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடியுள்ளது.



ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் 40 ஆண்டுகளை நிறைவு செய்து தனது 40 ஆவது ஆண்டுவிழாவை கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி கொண்டாடியுள்ளது. ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயமானது 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 48 மாணவர்கள் இங்கு கல்வி கற்றனர். தா.ஆறுமுகம் என்பவர் அப்போது அதிபராக இருந்தார். இவருடன் மேலும் நான்கு ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டுவந்தனர்.

1985 ஆண்டுஇந்தப் பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மேலும் தரமுயர்த்தப்பட்டு 2000 ஆம் ஆண்டு இசுறு பாடசாலையாகவும், 2012 ஆம் ஆண்டு 1000 பாடசாலைகள் திட்டத்தின் கீழும் கொண்டு வரப்பட்டது. 2013 ஆம் ஆண்டு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. 2014 இல் ஆரம்ப பாடசாலை பிரிந்து செல்ல இந்தப் பாடசாலை இடைநிலைப்பாடசாலையாக விளங்கி வருகின்றது. 2013 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையிலிருந்து 7 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். அத்துடன் நடைபெற்று முடிந்த க.பொ.த. (சா.த) பரீட்சையில் 80 வீதமான மாணவர்கள் உயர் தரத்துக்குத் தெரிவாகினர். தற்போது ஆசிரிய வளத்துடனும் சகல வளங்களுடனும் மாணவர்களின் கல்வி உயர்ந்து வருகின்றது. விளையாட்டிலும், கல்வியிலும் மாணவர்கள் கோட்ட, வலய தேசிய மட்டங்களில் முதன்மைநிலையைப் பெற்றுள்ளனர். தற்போது இந்தப் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. இன்று இந்தப் பாடசாலை ஒரு மகாவித்தியாலயமாக விளங்குவதுடன் பிரமாண்டமான விளையாட்டு மைதானத்தையும் கொண்டுள்ளது. 600 மாணவர்களையும் 28 ஆசிரிய வளங்களையும் கொண்டு இந்தப் பாடசாலை சிறப்புடன் இயங்கி வருகின்றது. தற்போதைய அதிபரான ந.கருணாகரனின் வழிநடத்தலில் பாடசாலை மேலும் வளர்ச்சியடைந்துவரும் நிலையில் 40 ஆம் ஆண்டு விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடியுள்ளது. இந்த விழாவின்போது மகுடசோதி புத்தக வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றன. இந்தவிழாவில் பிரதம விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் துணுக்காய் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிச் செயலர் பி.குருபரன், 64 ஆவது படை அணியின் அதிகாரி எஸ். வி.ரி.லியனகே, வடமாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதியின் இணைப்பாளர் ச.கனகரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்கு ஒரு கலங்கரை விளக்காக இந்தப் பாடசாலை தற்போது விளங்கி வருகின்றது. தற்போது இங்குள்ள மக்கள் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கி வருவதால் எதிர்காலத்தில் இந்தப் பாடசாலை மேலும் சிறந்து விளங்கக் கூடிய தொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக தமது அனைத்து வளங்களையும் இழந்த இந்தப் பகுதி மக்கள் கல்விச் செல்வத்தை இனியும் இழக்க முடியாது என்ற வைராக்கியத்துடன் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக ஆர்வம் காண்பித்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலை மேன்மேலும் பல முன்னேற்றங்களை அடைந்து இந்தப்பகுதியில் சிறந்த கல்விச் சேவையை வழங்க வேண்டும் என்பதே இந்தப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# இந்நாள் தமிழ் வரிவடிவு சீரானதா?



கங்காதரன்
சரசாலை சாவகச்சேரி.



யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழியல் இரண்டாம் ஆண்டில் பயிலும் ஒரு மாணாக்கி, தமிழ் மொழி, அதன் வரி வடிவு, அதிலுள்ள நிறை, குறை என்பன பற்றியும் "பிழைகளைத் திருத்தார்களா?" என்னும் தலைப்பில் வரிவடிவக் குறைபாடுகள் பற்றி வவுனியாவிலிருந்து ஓர் அன்பரும், தத்தம் கருத்துகளை அண்மையில் உதயனில் வெளியிட்டிருந்தார்.

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவு பற்றி கருத்து வெளியிட முற்படுவோர் கவனிக்க வேண்டியவை உண்டு.

01. ஒரு மொழிக்குரிய எழுத்தின் வரிவடிவு எக்காலத்தும் ஒரே மாதிரி இருந்ததில்லை. வருநாளிலும் வரிவடிவில் மாற்றம் ஏற்படடே தீரும். இவ் வரிவழிவ மாற்றம் அடிக்கடி நிகழ்ந்து, அடுத்துவரும் தலைமுறையினர் சொற்களை இனம் காண முடியாது இடர்ப்படுவதைத் தவிர்த்தல் மொழி வளர்ச்சியில் ஆர்வமுள்ள அறிஞர் கடன்.

02. நீண்டகாலமாகத் தமிழ் வரிவடிவில் காணப்படும் குறைபாடுகளைச் சற்றே கவனிப்போம். தமிழில் உயிர் எழுத்துக்கள் 12, ஆய்தம் 1, மெய்யெழுத்துக்கள் 18 என்பர். மெய்யெழுத்துக்கள் தலைப்புள்ளி பெற்றே வழங்கி வருகின்றன. உயிர் எழுத்துக்கள் குறில் 5, நெடில் 7 என வழங்கி வருகிறது. குறில், நெடில் என்னும் போது குறிலின் எண்ணிக்கைக்கு சமமானதாகவே நெடில் இருத்தல் வேண்டும். அ, இ,உ,எ,ஒ எனக் குறில் 5. ஆகவே நெடிலும் அவற்றுக்கிணையாக ஆ, ஈ, ஊ,ஏ,ஓ என அமைதலே நெறி. நிலை இவ்வாறிருக்க நெடில் என்னும் பெயரில் 'ஐ', 'ஔ' என்பன இடையில் புகுத்தப்பட்டது எவ்வாறு? இதனைச் செய்தோர் யார்? வடமொழி எனப்படும் சமஸ்கிருதம் பேச்சு வழக்கற்ற ஒரு மொழி. இதன் மீது ஆராக் காதல் கொண்ட ஆசியப் பிராமணர் அந்த மொழியிலுள்ள உயிர்ப்புணரொலிகளுக்குரிய 'ஐ', 'ஔ' என்னும் எழுத்துக்களை தமிழ் உயிரெழுத்துகளுள் திணித்தனர். இதன் விளைவே இன்றுள்ள ஒழுங்கற்ற நிலை. தனிவரிவடிவம் வகுக்கத் தெரியாத நிலையில் 'ஔ' என்னும் எழுத்தில் இரு தமிழ் வரிவடிவங்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஓர் உயிருக்கு ஒரு வரிவடிவு. அதுவே நெறி. ஓர் உயிரெழுத்தோடு மற்றொரு 'உயிர் மெய்யை' இணைத்து ஔ என எழுதிவிட்டு, அவை 'ஒ-ள' என ஒலிப்பதற்குப் பதில் 'அவ்' என ஒலிக்கும் எனக் கூறியோர் எத்துணைப் பேரரறிஞர்களாக இருந்திருத்தல் வேண்டும்!

இதனின் வேறாக குறிலின் வடிவோடு பொருந்தாத இரு நெடில்கள் உயிரெழுத்தில் உண்டு. 'இ', 'ஈ' என்னும் இணையையும் 'உ', 'ஊ' என்னும் இணையையும் நோக்குக. முன்னைய 'ஈ'யை 'இ' என எழுதி இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். 'ஊ' என்னும் வரிவடிவில் 'உ' என்னும் குறிலும், 'ள' என்னும் உயிர் மெய்யும் காணப்படுகின்றன. இதனை 'உ' என எழுதலாம் என இந்தக் கட்டுரையாளர் எழுதி வெளியிட்ட 'தமிழ் எழுத்துக்கள் : நேற்று, இன்று, நாளை' என்னும் சிறு நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். 'ஐ' என்னும் மலையாள வரிவடிவின் சாயல் இருப்பதை மறுப்பதற்கில்லை. மலையாளம், தமிழின் வழிமொழி என்பது மனங்கொள்ளத் தக்கது.

03. உயிர், மெய் எழுத்தை (மெய்யுயிர் எழுத்தை) அமைப்பதில் தேவையற்ற சிக்கல்கள் பல புகுத்தப்பட்டுள்ளன. உயிர் மெய் எழுத்துகள், மெய்யோடு உயிர் புணர்வதால் பிறப்பவை. இந்த ஒழுங்கில் அவை மெய், உயிர்களாகின்றன. தமிழ் இலக்கண மரபும், 'உடல் மேல் உயிர் வந்தொண்ணுதல் இயல்பே' எனச் சாற்றுகிறது. ஆகவே மெய்யும் உயிரும் இதே ஒழுங்கில் இணைந்த வடிவமே மெய்யுயிர் - அதாவது உயிர்மெய் ஆகிறது. இந்த எளிய ஒழுங்கைப் பின்பற்றும்போது அகரக்கால் 'ர', ஒற்றைக் கொம்பு 'எ', இரட்டைக்கொம்பு, விசிறி, கீழ்விலங்கு முதலியன தேவையற்றனவாகும். இத்தகைய வரிவடிவ அமைப்பை, சீரமைப்பில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் 'முதலெழுத்துமுறை' என்பர்.


இவை ஒரு புறமிருக்க, இந்த நாளில் கணினி, அதனோடு தொடர்புடைய மின்மவியற் கருவிகள் மலைப்பூட்டுமளவுக்கு மிகு வளர்ச்சியடைந்துள்ளன. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி 'றொபோ' என்னும் கணினி வழிக் கருவியை வியத்தகு செயல்களில் ஈடுபடுத்துகிறார்கள். இவ்வாறு முன்னேறும் போது, முதலெழுத்து முறையைப் பயன்படுத்திப் பேசும் போதே அதனை அச்சிடவல்ல ஒரு மின்மயவியற் கருவியை வகுப்பதற்கு அதிக நாளாகாது. இந்தத் துறையில் இன்னும் தெளிவான கருத்தைப் பெற விளைவார், முன்னரே இங்கு குறிப்பிட்டுள்ள 'தமிழ் எழுத்துக்கள் : நேற்று, இன்று, நாளை' என்னும் சிறு நூலைக் கருத்தூன்றி வாசித்தல் நன்று. இந்த நூல் யாழ்.பல்கலைக்கழக நூலகத்திலும், கொழும்பு தமிழ்ச் சங்க நூலகத்திலும் கிடைக்கும்.

# காங்கிரஸ் கட்சியில் அதிரடி மாற்றங்கள்

## அதிர்ச்சியில் மாநில முதலமைச்சர்கள்

புதுடில்லி, ஜூன் 23

நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட படு தோல்விக்கு காரணங்களைத் தேடி ஆராய்ந்து வரும் காங்கிரஸ் கட்சி, அசாம், மகாராஷ்டிரா, ஹரியானா ஆகிய மாநிலங்களின் முதல்வர்களை, தோல்விக்கு பலிகடா ஆக்க முடிவு செய்துள்ளது. இந்த மூன்று மாநிலங்களிலும் முதல்வர்களை மாற்றுவதற்கு காங்கிரஸ் மேலிடம் திட்டமிட்டுள்ளது.



காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் ஏன் தோல்வி ஏற்பட்டது என்பது குறித்தும், அங்கு மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்தும், உடனடியாக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, அசாம், மகாராஷ்டிரா மற்றும் அரியானா ஆகிய மாநில முதல்வர்களை மாற்றுவதற்கான ஆலோசனை நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

ஹரியானா முதல்வர் புபீந்தர் சிங் ஹூடா, மகாராஷ்டிரா முதல்வர் பிருதிவிராஜ் சவான் ஆகியோர் கட்சி தலைமையுடன் பேச்சு நடத்தியுள்ளனர். புபீந்தர் சிங் ஹூடா, புதுடில்லியில் நேற்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை சந்தித்து 30 நிமிடங்கள் பேசியுள்ளார். இதேபோல் பிருதிவிராஜ் சவான், சோனியாவின் அரசியல் ஆலோசகர் அகமது படேலைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அசாம் மாநில மூத்த அமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மாவும், சோனியா காந்தியை சந்திக்க அனுமதி கோரியுள்ளார் என்று தெரிகிறது. அதே வேளை- அசாம் மாநில முதல்வரையே முதலில் மாற்ற திட்டமிடப்படுகின்றது என்று தெரிய வருகின்றது.

நடந்து முடிந்த தேர்தலில், வரலாறு காணாத தோல்வியை காங்கிரஸ் சந்திக்க நேரிட்டது.

இதுவரையில் இல்லாத அளவுக்கு 44 தொகுதிகளில் மட்டுமே அந்தக் கட்சி வெற்றி பெற்றது. (ற)



ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெறக்கோரி, சமாஜ்வாதி உள்ளிட்ட பல்வேறு கட்சியினரும் தலைநகர் புதுடில்லி உட்பட இந்தியாவின் பல இடங்களில் நாட்டின் போராட்டத்தில் ஈடுபட்டனர். பயணிகள் ரயில் கட்டணம் 14.2 சதவீதமும், சரக்கு கட்டணம் 6.5 சதவீதமும் உயர்த்தப்படுகின்றது என்று நேற்று முன்தினம் இந்திய மத்திய அரசு அறிவித்தது. அதையடுத்தே இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

# இக்கட்டான தருணங்களில் துணை நின்ற நாடு ரஷ்யா

## பிரதமர் மோடி புகழாரம்

புதுடில்லி, ஜூன் 23

இக்கட்டான தருணங்களில் இந்தியாவுக்குத் துணை நின்ற ரஷ்யா, நம்பிக்கைக்குரிய நண்பன் என பிரதமர் நரேந்திர மோடி ரஷ்யாவுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

ரஷ்ய துணைப் பிரதமர் திமித்ரி ரோகோஸின் பிரதமர் நரேந்திர மோடியை கடந்த வியாழக்கிழமை சந்தித்தார். அப்போது, மோடிக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் வாழ்த்துக்களை ரோகோஸின் தெரிவித்தார். மேலும், மோடியுடன் இணைந்து செயற்படவும், இரு நாடுகளுக்கு இடையே உள்ள சிறப்புவாய்ந்த உத்தியோகபூர்வமான நட்புறவை வலுப்படுத்தவும் புடின் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ரோகோஸினிடம் மோடி பேசுகையில், இந்த ஆண்டு இறுதியில் புடினுடன் ஆக்கபூர்வமான தொலைநோக்குடைய சந்திப்பை மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும், இக்கட்டான தருணங்களில் இந்தியாவுக்குத் துணை நின்ற ரஷ்யா, இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நண்பன். இந்தியாவின் இராணுவபலத்தை கட்டமைத்ததில் ரஷ்யா பெரும் பங்கு வகித்தது. அதனால், ரஷ்யா மீது இந்தியா நல்லெண்ணம் கொண்டுள்ளது. ரஷ்யாவுடனான உறவை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறேன் என்று பிரதமர் நரேந்திர மோடி ரோகோஸினிடம் தெரிவித்தார். (கு)



# இந்தியாவின் தேசிய மொழி இந்தி அல்லவாம்

புதுடில்லி, ஜூன் 23

இந்தி மொழி பயன்பாடு குறித்த சர்ச்சை வெடித்துள்ள நிலையில், இந்தியாவுக்கென்று தேசிய மொழியே கிடையாது என்று முன்பே நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

குஜராத் உயர்நீதிமன்றத்தில், 2009 ஆம் ஆண்டு, சுரேஷ் கச்சாடியா என்பவர் ஒரு பொது நல வழக்கு தொடர்ந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், இந்தியாவின் தேசிய மொழி இந்தி, நாட்டின் பெரும்பாலான மக்கள் இந்திதான் பேசுகிறார்கள்.

எனவே, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் அட்டையின்மீது இந்தி மொழியில் அப்பொருள் குறித்த விவரங்களைப் பொறிப்பதை கட்டாயமாக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், "இந்திதான், இந்தியாவின் தேசிய மொழி, அதுதான் அலுவல் மொழி, என்பதற்கான ஏதாவது அறிவிக்கைகள் வெளியாகியுள்ளனவா? இதுதொடர்பான அரசாணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டம், இந்தியை ஒரு அலுவல் மொழியாக மட்டுமே குறிப்பிடுகிறதே தவிர தேசிய மொழியாக கிடையாது. தேசிய மொழி அந்தஸ்தில் இல்லாத இந்தியும், பிற மொழிகளைப் போலதான் கருதப்பட வேண்டும். இந்தியை அரச நடைமுறைகளில் கட்டாயப்படுத்த முடியாது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



மும்பை அருகே உள்ள லோவர் பாரல் பகுதியில், 15 அடுக்கு மாடி கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பெரும் போராட்டத்தின் பின்னர் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்தோ சேதவிவரங்கள் குறித்தோ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# எம்.பியின் பலாப்பழங்கள் மாயம்; வலை வீசுகின்றனர் பொலிஸார்

புதுடில்லி, ஜூன் 23

பீகார் மாநில ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் வீட்டு மரத்தில் இருந்த இரு பலாப்பழங்கள் காணாமற் போயுள்ளன. அதையடுத்துப் பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

பா.ஜ.கவின் மாநிலங்களவை உறுப்பினரான மகேந்திர பிரசாத்தின் பண்ணை வீட்டில் இருந்த மரத்தில் 9 பலாப்பழங்கள் இருந்துள்ளன. அவற்றில் 2 பழங்கள் காணமற் போய்விட்டன. அதையடுத்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

அவரது வீட்டுக்கு விரைந்த பொலிஸாரும், கை ரேகை நிபுணர்கள், அங்கிருந்த கை ரேகைகளையும், தடயங்களையும் பதிவு செய்து கொண்டனர்.

அத்துடன் பண்ணை வீட்டில் இருந்த ஆறு அங்குல கால்தடத்தையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனராம். அத்துடன் பலாப்பழங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பெரும் தேடுதல் வேட்டையையும் ஆரம்பித்துள்ளனராம்.

5 மாதங்களுக்கு முன்னர் உத்தரபிரதேசத்துப் பொலிஸார், அமைச்சர் அசாம்கானின் எருமை மாடுகளை தேடி அலைந்து கண்டுபிடித்திருந்தனர். (ற)

# படம் எடுத்த ரசிகருக்குப் 'பளார்' விட்டார் விஜயகாந்த்!

கோலாலம்பூர், ஜூன் 23

தன்னுடன் பல்வேறு கோணத்தில் புகைப்படம் எடுக்க முயன்ற ரசிகர் ஒருவரது கன்னத்தில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஓங்கி அறைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மகன் சண்முக பாண்டியன் நடிக்கும் 'சகாப்தம்' திரைப்படத்தின் படப்பிடிப்பு மலேஷியாவில் நடந்து வருகிறது. இதற்கான படப்பிடிப்பு இடங்களைத் தேர்வு செய்வதற்காக விஜயகாந்த் மற்றும் அவரது மனைவி பிரேமலதா ஆகியோர் மலேஷியா சென்றனர்



அங்குள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த விஜயகாந்தை சந்தித்து அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள அவரது ரசிகர்கள் விரும்பினர். அதற்காக விஜயகாந்தின் மனைவி பிரேமலதாவிடம் அனுமதி வாங்கியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

அதன்படி, ரசிகர்கள் ஒருவர் பின் ஒருவராக விஜயகாந்துடன் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர். அப்போது ஷாஜகான் என்ற ரசிகர் மீண்டும், மீண்டும் விஜயகாந்துடன் பல்வேறு கோணத்தில் புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுத்தாராம். இதனால் கோபமடைந்த விஜயகாந்த், அந்த ரசிகரின் கன்னத்தில் ஓங்கி அறைந்ததாக கூறப்படுகிறது. இதனால் அங்கிருந்த ரசிகர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)



**வெனிசுவேலாவில் போராட்டம்**

கடந்த பெப்ரவரி மாதம் முதல் வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோவுக்கு எதிராக அந்த நாட்டில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. போராட்டங்கள் வன்முறைகளாக மாற்றம் பெற்றதுடன், இராணுவத்தினருக்கும் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கும் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றால் இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளதுடன் 800க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நிலச்சரிவு; நேபாளத்தில் 13 பேர் சாவு

காத்மண்டு, ஜூன் 23

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக அங்கு பெய்து வரும் கடும் மழை காரணமாகவே இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. (ற)

## போருக்கு தயாராகின்றன ரஷ்ய படைகள்

மொஸ்கோ, ஜூன் 23

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கிடையேயான முறுகல் நிலை தீவிரமடைந்து வரும் நிலையில் இராணுவத்தினரைப் போருக்குத் தயாராக இருக்குமாறு உத்தரவிட்டுள்ளர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று அந்த நாட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை 65,000 ரஷ்ய இராணுவத்தினர் தற்போது போர் ஒத்திகை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

# கிளர்ச்சியாளரின் கை ஓங்குகிறது ஈராக்கில்

## முக்கிய நகரங்கள் பல அவர்கள் வசம்

பாக்தாத், ஜூன் 23

ஈராக் தலைநகர் பக்தாத்தை நோக்கி முன்னேறி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்றுவரும் நிலையில், சிரியாவுடனான எல்லை நகரங்கள், வட மேற்கு ஈராக்கின் முக்கிய நகரங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் வேகமாக முன்னேறிவரும் நிலையில், சிரியாவிலும், அதனை அண்மித்துள்ள பகுதிகளிலும் கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்பான பதுங்கு கிடங்குகளை அமைத்துள்ளதால் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது என்பது கடுமையான பணியாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

பைஜி என்ற இடத்திலுள்ள முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு மையங்கள் மற்றும் முத்தன்னா என்னுமிடத்திலுள்ள பயன்படுத்தப்படாத ஆயுதக் கிடங்கு என்பன கிளர்ச்சியாளர்களின் வசம் வந்துள்ளன என்று கூறப்பட்டாலும், அதை உறுதிப்படுத்த முடியவில்லை.



*கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஈராக் இராணுவச் சிப்பாய்.*

சிறந்த போர் பயிற்சிகளையும், உபகரணங்களையும் கொண்டுள்ள கிளர்ச்சியாளர்களை ஒடுக்க அரச படைகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வரும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி, விரைவில் ஈராக் பயணம் மேற்கொண்டு, சன்னி பிரிவினருக்கும் அதிகாரப் பகிர்வு அளிப்பது தொடர்பாக விவாதிப்பார் என்று தெரிகிறது. (ற)

## சிரிய இராணுவம் தாக்குதல்

### 16 பேர் சாவு

டமஸ்கஸ், ஜூன் 23

கிழக்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள நகரம் மீது அந்த நாட்டு இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரே நாளில் 6 தடவைகள் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும், பொதுமக்களும் தாக்குதலால் உயிரிழந்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## எகிப்தில் மோதல்; இருவர் சாவு

கெய்ரோ, ஜூன் 23

எகிப்தில் ஜனாதிபதி அல் சிசியின் ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு இடையே நடந்த மோதலில் இருவர் உயிரிழந்தனர். தலைநகர் கெய்ரோ உட்படப் பல நகரங்களிலும் ஜனாதிபதி ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்கள் ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்த தாக்குதல்கள் தொடர்பாக 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று எகிப்து உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ற)

## தந்தையின் பிறந்த நாளுக்காக கூகுளுக்கு கடிதம் எழுதிய சிறுமி

கலிபோர்னியா, ஜூன் 23




புகழ்பெற்ற இணையத்தளமான கூகுள் நிறுனத்தின் தலைமையகம் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் வேலை பார்க்கும் பணியாளர் ஒருவரின் மகள் அந்த நிறுவனத்தின் நிறுவுநரான டேனியல் ஷிப்லேகாப்பிற்கு தனது மழலைக் கையெழுத்தால் கடிதம் ஒன்றை எழுதியுள்ளாள்.

"எனது தந்தைக்கு வருகிற புதன் கிழமை பிறந்த நாள். அவருடன் இணைந்து அவரது பிறந்த நாளை நான் கொண்டாட விரும்புகிறேன். ஆனால் அவருக்கு வார விடுமுறை சனிக்கிழமைதான் வருகிறது. எனவே அவரது பிறந்த நாளின் போது அவர் என்னுடன் இருப்பதற்கு அவருக்கு நீங்கள் புதன் கிழமை விடுமுறை தரவேண்டும்." என்று அந்தக் கடிதத்தில் சிறுமி குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதத்தை படித்த டேனியல் உடனடியாக அச்சிறுமிக்கு பதில் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினார்.

"எங்கள் நிறுவனத்தின் திறமையான ஊழியர்களுள் உன் தந்தையும் ஒருவர். அதனால் அவரது பிறந்த நாளை கொண்டாடுவதற்கு அந்த வாரம் முழுவதுமே விடுமுறை அளிக்கிறேன்" என்று எழுதியிருந்தார். இந்த இரண்டு கடிதங்களின் புகைப்படங்களும் அமெரிக்க செய்தி நிறுவனங்களின் சிறப்புச்செய்தியாக பரபரப்பை கிளப்பி வருகின்றன. (ற)

## நாடு திரும்பும் அகதிகளுக்கு ஆஸி. நிதி உதவி

மெல்பேர்ன், ஜூன் 23

ஆஸ்திரேலியாவின் பசிபிக் குடியேற்ற முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தத்தமது நாட்டுக்கு திரும்பிச் செல்லத் தாமாக முன்வரும் பட்சத்தில், அவர்களுக்கு 10 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலரை அந்த நாடு வழங்க உள்ளது. 'ஃபேர்ஃபேக்ஸ்' என்ற ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பாப்புவா நியூ கினியாவின் மானஸ் தீவு மற்றும் நவ்ரு மாகாணத்தில் உள்ள லெபனான் நாட்டு அகதிகள் தங்கள் நாட்டுக்கு திரும்பும் பட்சத்தில், அவர்களுக்கு 10 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர் வழங்கப்படும் என்றும், ஈரானியர்களுக்கு 7 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலரும், ஆப்கன் அகதிகளுக்கு 4 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலரும், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் மியான்மரைச் சேர்ந்த அகதிகளுக்கு 3,300 ஆஸ்திரேலிய டொலரும் வழங்கப்பட உள்ளன என்று அந்தத் தகவலில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், ஆஸ்திரேலிய குடியேற்றத்துறை அமைச்சரான ஸ்காட் மோரிசன் இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.

அதேவேளை இவ்வாறு பணம் வழங்கும் முறையை விமர்சித்துள்ள அகதிகள் அமைப்பினர், இதனால் அகதிகள் நாடு திரும்புவதில் சிக்கல்கள் எழும்' என்று கூறியுள்ளதுடன் இந்தத் திட்டத்துக்கு எதிராகப் கண்டனப் போராட்டமும் நடத்தியுள்ளனர். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எந்தவொரு வேலையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும்.

**இடபம்**: வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகள் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான துணி போன்றவைகளை வாங்குவீர்கள். தம்பதியினரிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

**மிதுனம்**: உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. எந்தவொரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும்.

**கடகம்**: உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். சகஊழியர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். காரிய வெற்றி உண்டாகும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமுகமான நிலை நீடிக்கும்.

**சிங்கம்**: மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பணவரவு தடைநீங்கி கைக்கு வந்து சேரும்.

**கன்னி**: மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். பிள்ளைகள் பற்றிய மனக்கவலை நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பாடுபடுவீர்கள்.

**துலாம்**: எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும்.

**விருச்சிகம்**: திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**தனுசு**: எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாகப் பேசுவது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும்.

**மகரம்**: வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். தேவையான உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

**கும்பம்**: எதைச்செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயற்றிட்டங்களை பற்றி கூறுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்**: பெரியவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதும் நன்மை தரும். மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்வதன் மூலம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.

## நாளை

**ஆனி-10 செவ்வாய்க்கிழமை | 24.06.2014**

திதி: துவாதசி பி.ப.12.01 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
பி.இ.01.59 வரை

சுபநேரம்: 10.25-11.55 வரை
இராகுகாலம்: 02.55-04.25 வரை
கார்த்திகை விரதம், பிரதோஷ விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## வேதாந்தத் தத்துவம்

பழம்பெரும் தேசிய இனங்களான கிரேக்க, ஆரிய இனங்கள் இரண்டும் வேறு வேறான சூழ்நிலைகளில் வளர்ந்தவை. முன்னையதன் சூழ்நிலையோ அழகு செறிந்தது; இன்பமானது; இயற்கை கிளர்ச்சியூட்டுவது; உணர்ச்சி கொந்தளிக்கும் பருவநிலை உள்ளது. பின்னையதன் சூழ்நிலையோ உன்னதமானது; உடல் உழைப்பு அதிகம் வேண்டப் படாதது. இந்த இரண்டும் இருவிதமான நாகரிகங்களை உருவாக்கின. கிரேக்கர்களின் ஆராய்ச்சி எல்லையற்றதான புறவெளியைப் பற்றியது; ஆரியர்களின் ஆராய்ச்சியோ எல்லையற்ற அகம் பற்றியது. ஓரினம் அண்டத்தைப் பற்றியும் மற்றைய இனம் பிண்டத்தைப் பற்றியும் ஆராய்ந்தது. உலக நாகரிகத்தில் இரண்டுக்குமே தனியிடம் உள்ளன. இதில் ஒருவர் மற்றவரிடமிருந்து கடன் வாங்க வேண்டியது எதுவுமில்லை, ஆனால் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்களை வளர்த்துக் கொள்வார்களானால் நன்மை விளையும். ஆரியர்கள் இயல்பாகவே எதையும் ஆராய்ந்தறிபவர்கள். இதனால் கணிதமும் இலக்கணமும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வளர்ந்தது; அவர்களிடம் மனப் பாகுபாட்டில் முழு வளர்ச்சி காண்கிறோம். பிதகோரஸ், சோக்ரடீஸ், பிளேட்டோ முதலியவர்களிடமும் இந்தியக் கருத்துக்களின் சாயலைக் காண்கிறோம்.

ஸ்பெயின், ஜேர்மனி முதலிய பல ஐரோப்பிய நாடுகளில் வெவ்வேறு சமயங்களில் இந்தியக் கருத்து எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது பற்றி சுவாமிஜி விவரித்தார். இந்திய இளவரசரான தாராஷ்கோ உபநிடதங்களை பாரசீகம், லத்தீன் ஆகிய மொழிகளில் மொழி பெயர்த்தார். ஷோபனேர் என்ற தத்துவ ஞானி லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்ட உபநிடதங்களைப் படித்தார். அவரது கோட்பாடு இதிலிருந்தே உருவாக்கப்பட்டது. கான்ட் என்ற தத்துவ ஞானியின் கருத்துகளிலும் உபநிடதங்களின் சாயல் காணப்படுகிறது.

# விற்றமின் - 'ஏ' குறைபாட்டை நீக்கக் கூடிய புதிய ரக வாழைப்பழம் உருவாக்கம்

## ஆஸி . விஞ்ஞானிகள் சாதனை



உடலில் விற்றமின் - 'ஏ' சத்தை அதிகரிக்கவும் ஆபிரிக்காவின், லட்சக்கணக்கான மக்களின் வாழ்வை மீட்பதற்கும் சிறந்த வாழைப்பழங்களை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். விற்றமின் 'ஏ' குறைபாட்டை நீக்கும் நோக்கில், வாழைப்பழத்தின் மரபணுவில் மாற்றம் செய்து, விற்றமின் - 'ஏ' சத்து நிறைந்த வாழைப்பழத்தை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான உகண்டா மற்றும் அதன் அண்டை நாடுகளில், விற்றமின் - 'ஏ' குறைபாட்டால் மக்களுக்கு ஏற்பட்ட பார்வைக் குறைபாட்டை நீக்குவதற்கும், இந்த பற்றாக்குறையால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறப்பதைத் தடுப்பதற்கும், இந்த புதிய ரக வாழைப்பழம் உருவாக்கப்பட்டுள்ளது. வாழைப்பழத்தில் உள்ள, 'பீட்டா - கரோட்டின்' அளவை அதிகரிப்பதற்காக வடக்கு மரபணு மாற்ற முறையில் இந்த வாழைப் பழம் உருவாக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக, ஆபிரிக்க மக்களுக்கு இந்தப் பழங்களை கொடுத்து, பரிசோதிக்க உள்ளதாகவும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | | | | 6 | 7 | | |
| | | | 1 | 2 | | | | 9 |
| | 5 | 7 | 4 | 3 | 9 | 1 | | |
| 3 | | | 9 | | 5 | 6 | | |
| | | | | 4 | | | | |
| | | 2 | 6 | | 3 | | | |
| | | 8 | 3 | 6 | 4 | 2 | 5 | |
| 6 | | | | 1 | 8 | | | |
| | | 1 | 5 | | | | 6 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 5 | 4 | 3 | 2 | 1 | 7 | 8 |
| 1 | 7 | 3 | 9 | 6 | 8 | 5 | 4 | 2 |
| 8 | 2 | 4 | 7 | 1 | 5 | 6 | 3 | 9 |
| 5 | 8 | 1 | 6 | 7 | 9 | 3 | 2 | 4 |
| 9 | 4 | 2 | 1 | 5 | 3 | 7 | 8 | 6 |
| 7 | 3 | 6 | 8 | 2 | 4 | 9 | 1 | 5 |
| 4 | 1 | 7 | 5 | 8 | 6 | 2 | 9 | 3 |
| 2 | 5 | 9 | 3 | 4 | 7 | 8 | 6 | 1 |
| 3 | 6 | 8 | 2 | 9 | 1 | 4 | 5 | 7 |

## விநோத உடைப்போட்டி

சாவகச்சேரி நகர சபையினர் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கு இடையிலான விநோத உடைப் போட்டியை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நகர சபை முன்றிலில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் விநோத உடைகளில் சிறார்கள் பங்குபற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## அபராதம்

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் மதுவரி பரிசோதகர்களாலும் பொலிஸாராலும் நடத்தப்பட்ட தேடுதலில் மேலதிகமாக கள்ளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் நீதவான் அபராதம் விதித்தார். இருவர் தலா 1500 மில்லி லீற்றர் கள்ளை மேல திகமாக வைத்திருந்தனர் என்றும் ஒருவர் மூவாயிரம் மில்லி லீற்றர் கள்ளை மேலதிகமாக வைத்திருந்தனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக் குகளை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதை அடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (வ-109)

# முதியோரின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்வு



தென்மராட்சி, ஜூன் 23

கொக்குவில் "இதம்" உளவள நிலையத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி சாந்தி இல்ல முதியோர்களின் திறமைகளை வெளிக் கொணரும் "திறந்தவெளி மகிழ்வூட்டல்" என்னும் நிகழ்வுகளை காலை மாலை நிகழ்வுகளாக நடத்தினர்.

இந்த நிகழ்வில் உளவள நிலைய மாணவர்களுடன் சாந்தி நிலையத்தைச் சேர்ந்த 100 முதியோர்கள் கலந்து தமது திறமைகளை வெளிக் கொணர்ந்தனர். முதியவர்கள் தமது கடந்த கால அனுபவங்கள் பாடல்கள், கலைத் திறன்கள் போன்றவற்றை நிகழ்த்தினர். அத்துடன் சிறு விளையாட்டுக்களும் நடத்தப்பட்டன. இலை மறைகாய்களாக காணப்பட்ட பல முதியவர்கள் தமது கலைத் திறன்களை வெளிக்கொணர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மதுப்பிரியர்களின் தொல்லை கைதடி மக்கள் முறைப்பாடு

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக் கட்டடத்தில் ஒன்றுகூடும் அந்தப் பகுதி மக்கள் மற்றும் குறித்த பகுதியால் பயணிப்போர் மது போதையில் நிற்கும் இளைஞர்களால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தில் இயங்கி வந்த உப பணிமனை தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவதாகவும், பழைய கட்டடத்தில் இரவு, பகல் பாராது கூடும் அந்தப் பகுதி மக்கள்போதையின் உச்சத்தில்தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது. இதனைத் தட்டிக் கேட்கச் செல்வோரையும் இவர்கள் அச்சுறுத்துவதுடன் தாக்கவும் முயல்வதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் மாலையும் மதுபோதையில் மேலாடை இன்றி நின்ற குடிமகன் தகாத வார்த்தைகளால் வசை மாரி பொழிந்துள்ளார். தனது வீட்டில் பெண் பிள்ளைகள் இருப்பதாகக் கூறி இதனைத் தட்டிக் கேட்கச் சென்ற அயல்வீட்டு நபரையும் அவர் அச்சுறுத்தியதுடன் தாக்கவும் முற்பட்டுள்ளார். எனவே இந்த விடயத்தில் குறித்த பிரதேச சனசமூக நிலைய நிர்வாகம், கிராம சேவையாளர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை என்பன இணைந்து உடனடிநடவடிக்கைஎடுக்குமாறு கோரியுள்ளனர். (வ-288)

# அத்துமீறி வீடு புகுந்தவருக்கு ஒருவருட கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஜூன் 23

அத்துமீறி வீடு புகுந்தவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதோடு ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் யாழ்.மேல் நீதிமன்று கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டது.

இரட்டைக் கொலைக் குற்றச்சாட்டில் ஒருவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் அவர் இரட்டைக் கொலையுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்று கண்ட நீதிமன்று அவர் குறித்த வீட்டுக்குள் அத்துமீறி உட்புகுந்தமைக்காக அவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் இந்த வழக்கு வியாழக்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பருத்தித்துறை தும்பளையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி நல்லதம்பி அழகம்மா, வேலாயுதபிள்ளை சாந்தினிதேவி ஆகியோர் கொல்லப்பட்டதோடு அவர்களிடமிருந்து 64 ஆயிரத்து 950 ரூபா பெறுமதியான பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையைச் சேர்ந்த நபர் நான்கு மாதங்களின் பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விளக்கமறியலில் இருந்த அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2007 ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவர் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்யப்படுகிறார். எனினும் பதிலிடப்பட்ட இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 434 இன்கீழ் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு அனைத்துச் சாட்சியங்களின் அடிப்படையில் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. தவிர ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுகிறது. அதனைச் செலுத்தத் தவறின் 5 மாதகால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் மேல்நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ-4)

## புதிய நியமனம்

இமையாணன் அ.த.க.பாடசாலையின் புதிய அதிபராக குண்டுமணி - ரவீந்திரன் கடந்த செவ்வாய் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். குறித்த பாடசாலையின் அதிபராக இருந்த திருமதி நவமணி சந்திர சேகரம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராகப் பதவி உயர்வுபெற்றுச்சென்றுள்ளார். இதனை அடுத்து வெற்றிடமாக இருந்த இந்தப் பாடசாலைக்கு கு.ரவீந்திரனை வடமராட்சி கல்வி வலயம் அதிபராக நியமித்துள்ளது. இதனை அடுத்து அவர் செவ்வாய்க்கிழமை தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். (ஓ-108)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்.மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
சாவகச்சேரி நுணாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சுந்தரம் சரவணபவானந்தன் (அப்பர்)

தோற்றம் 03.09.1948 — மறைவு 04.07.2013

திதி: துவாதசி 23.06.2014

நீங்காத அன்பு தந்து அழியாத பாசம் வைத்து
ஆண்டெல்லாம் அழுது புரள நீங்கள் எம்மை விட்டுச் சென்றீர்கள்!
நேர்மையும் கண்ணியமும் உமது இரண்டு கண்களாய்
பழகும் திறனுடையாய் சிரிக்கும் மனதுடையாய்
பொறாமை உணர்வுகள் இன்றி அனைவரும் நலம் வாழ
நல்லிதயம் கொண்டு வாழ்ந்தாய்
அழகுச் சூரியனே எம்மையெல்லாம் விட்டுப் பிரிய
காலன் உன்னைக் கடத்திச் சென்றான்.
ஓராண்டு போனது ஆனால் ஒரு நாள்
போனது போல் நாங்கள் எல்லோரும் துடிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் அன்பு:
மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், மச்சான்மார், மச்சாள்மார்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தி
யோகத்தராக கடமையாற்றும்
**கந்தசாமி சிவயோகன்**
அவர்களது மாமனார்
**பஞ்சரத்தினம் சண்முகதாசன்** அவர்கள்
காலமகிவிட்டார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible], பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு. (49274) (12.6) பிரதேச செயலரும், அலுவலக உத்தியோகத்தர்களும்,

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமை
யாளர் சங்கத்தின் செயலாளரும்
நந்தினி பேக்கரி
உரிமை யாளருமாகிய
**கா.பாஸ்கரன்**
அவர்களின் அன்பு மாமனார்
**சிங்கராஜர்**
**ஞானப்பிரகாசம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.

(அ/10171) (4.3.6.)

யாழ் மாவட்ட
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**
Jaffna District

## சமய சந்நிதிகளில்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ மகாலிங்க சிவக்குருக்கள் தலைமையில் இடம்பெற்று வருகிறது. (ஒ-9)

* * *

சாவகச்சேரி சங்கத்தானை வைத்திலிங்கம் வீதி காளி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 3 ஆம் திகதி விஷேட சங்காபிஷேகம் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறும். சிவஸ்ரீ சி.ராகுலன் குருக்கள் தலைமை யில் திருவிழா கிரியைகள் இடம்பெறும். (ஒ-9)

* * *

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது. இன்று மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை காலை 6.15 மணிக்கு யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் நடைபெறும். மாலை 6 மணிக்கு திருச்சொரூப பவனியும் வீதி வலமும் ஆசீரும் இடம்பெறும். (க-135)

* * *

நெடுந்தீவு நடுக் குறிச்சி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங் கள் நடைபெறும். 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மாலை 6 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். வசந்த மண்டபப் பூசை முடிவடைந்ததும் சைவத் தமிழ் அருட்கலைஞர் அவிரொளி சிவம் சு.தியாக லிங்கம் தினமும் விநாயகப் பெருமானுக்கு தமிழில் அர்ச்சனை செய்வார். (க-7)

* * *

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செப மாலையுடன் நவ நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செப மாலையுடன் நற்கருணை விழா நடைபெற்று மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலிஒப்புக்கொடுக் கப்படும். (ஒ-115)

* * *

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும். தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் நடைபெறும். (க-28)

### தொடர் சொற்பொழிவு

அளவெட்டி ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவப் பெருந்திருவிழாவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமைவரை 13 தினங்கள் பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் செஞ்சொற்வேந்தர் எஸ்.ரி.குமரன் தொடர் தெய்வீக சொற்பொழிவுகளை வழங்கவுள்ளார். (க)

## கண்ணீர் அஞ்சலி



அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோயிலின்
வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி
எமது ஊரின் பொதுக் கருமங்களில்
முன்னின்று உழைத்தவருமாகிய
**பஞ்சரத்தினம் சண்முகதாசன்**
(காவேரி சில்க்ஸ் உரிமையாளர்)
அவர்களின் பிரிவால் ஊரே கலங்கி நிற்கிறது
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அமரர் தம்பையா தர்மலிங்கம்- குடும்பம் (49261) (45.6)
(முன்னாள் தலைவர்: அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோயில்)

## இதய அஞ்சலி



தெல்லிப்பழை
ஸ்ரீமான் **பொன்னையா செல்லப்பா**
(இளைப்பாறிய சுகாதார அதிகாரி,
முன்னாள் உபதலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
அவர்கள் 102 வயதுவரை வாழ்ந்த
பெருந்தகை, எங்கள் தேவஸ்தான
வளர்ச்சியில் அயராது அர்ப்பணிப்புடன்
செயற்பட்ட பெருந்தகையின் பிரிவு குறித்து
வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தி பெற
துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.
நிர்வாகசபை (அ.10172) (45.6)
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 25.05.2014 இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர் **ஐயாமுத்து விசாகரத்தினம்**
*(முன்னாள் நீர்ப்பாசனத்திணைக்கள வரைபடவியலாளர்)*
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை (24.06.2014)செவ்வாய்க்கிழமை
அதிகாலை நடைபெற்று முற்பகல் 11 மணியளவில்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் அவரது இல்லத்தில்
நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்
கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம
சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

மலர்வு 07.11.1940 — உதிர்வு 25.05.2014

நெடியகாடு, வல்வெட்டித்துறை. (49269)(45.6) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **தெய்வநாயகி வடிவேலு**
அன்னை மடியில் 23 ★ 07 ★ 1940
ஆண்டவன் அடியில் 03 ★ 07 ★ 2013

ஆண்டு ஒன்று அகன்றாலும்
உங்கள் நினைவுகள் அகலாது தாயே
கருவாய் சுமந்து உருவாய்
எம்மை உயர்த்தி வளர்த்த தாயே
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
அம்மா உங்களைத் தேடுகின்றோம்
அன்பாய் அரவணைத்து ஆறுதல் அளித்த தாயே
என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டு
இருக்கிறீர்கள் எப்போ காண்போம் இனி...
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

குடும்பத்தினர்.
விழிசிட்டி, ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம். (49259)(4.6)

## துயர் பகிர்கின்றோம்



**பஞ்சரத்தினம் சண்முகதாசன்**
(உரிமையாளர் - காவேரி சில்க்ஸ்
பெரியகடை, யாழ்ப்பாணம்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியுடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

டாட் என்ரபிறைஸ், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (49275)(4.6) உரிமையாளரும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்



**சிங்கராஜர் ஞானப்பிரகாசம்**
(மெக்கானிக் வாசையா)

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜர் ஞானப்பிரகாசம் 21.06.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராஜர் - மேரிமாகிரேட் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற எலிசபேத் புஸ்பராணியின் அன்புக் கணவரும், லடிஸ்லாவா, செபஸ்ரின் (சுரேஸ் - ஜேர்மனி), மேரிஆன் (கலா - லண்டன்), யஸ்ரின் யோகேந்திரன் (தபால் ஊழியர் - யாழ்.தபால் கந்தோர்), ஜெஸ்மின் சுதா, கொட்வின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அழகராஜா மற்றும் ஆன்மேவின், ஜோர்ச், ஆன்டயஸின் ஸ்மைலி, பாஸ்கரன் (நந்தினி வெதுப்பகம்), ஏஞ்சல் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மேரிறோசலின், பொன்மணி, பற்றிக் (ஆனந்தராஜா), யேசுதாசன், S.L.மரியநாயகம், மார்ட்டின், றோஸ்மேரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகபாலன், பற்றிக், இம்மானுவேல் (கிளி), போல் (ராதா), ரமேஸ், ரமணி, ரங்கேஸ், ரவின், காலஞ்சென்றவர்களான தனயன், ராசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கொலஸ்ரிக்கா ஆஷா (இலங்கை வங்கி - வட பிராந்தியக் காரியாலயம்), கெவின்போல் (தம்பா), றொஷான், பெபூஷியா, ஜெனிபர்ஸ்ரெல்லா, ஜெனோன், பிரியங்கா, சுஜந்திகா, விஸ்வஜின், நிவேதினி, நிவேதிகா, நிவேதிகன், நித்திலன், அஸ்லி, கெல்வின் ஆகியோரின் பேரனும், ஹர்ஷன் வெனோ, திவேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (23.06.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.30 மணிக்கு கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


1/2, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (021 222 0457) (49271) (12.6) தகவல்: குடும்பத்தினர்.

## இந்து சமய நூலகம்

கொழும்பு, ஜூன் 23
கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இரண்டாம் மாடியில் இந்து சமய ஆய்வு நூலகம் இயங்குகின்றது.
இந்நூலகத்தில் இந்து சமயம், தமிழ் இலக்கியம் சார்ந்த 7,000 இற்கும் மேற்பட்ட தமிழ் நூல்களும் 2,000 அளவிலான ஆங்கில நூல்களும் உள்ளன.
உசாத்துணை நூலகமாகப் பயன்படுத்தப்படுகின்ற இந்த நூலகத்தை வாசகர்கள் வார நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பயன்படுத்தலாம்.
தமிழ் இலக்கியம், இந்து சமயம், இந்து தத்துவங்கள் சார்ந்த துறைகளில் கல்வி பயிலும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவு மாணவர்கள், பல்கலைக்கழக கலைத்துறை மாணவர்கள் இந்த நூலகத்தை பயன்படுத்தலாம். தவிரவும் இந்து சமயத்துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும் பயன் தரத்தக்க நூல்களை இந் நூலகம் கொண்டுள்ளது. எனவே ஆர்வலர்கள் இந்நூலகத்தைத் தமது வசதிகருதி பயன்படுத்த முடியுமென திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் கல்விபயின்ற அமரர் இராமலிங்கம் சுப்பிரமணியத்தின் 100 ஆவது பிறந்த தினத்தையொட்டி அவரது பிள்ளைகளால் மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பாடசாலைச் சீருடைகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி விமலாதேவி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.
பாடசாலைக்கான அலுமாரி ஒன்றும் இராமலிங்கம் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அமரர் இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் புதல்வரான ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் சு.திருநாவுக்கரசு, மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குகின்றார். (வ-250)



## குளம் புனரமைத்து மக்களிடம் கையளிப்பு

வரணி, ஜூன் 23
ஜே /331 விடத்தல்பளை கிராம அலுவலர் பிரிவில் 522 ஆவது படைத்தளத்துக்கு முன்பாக உள்ள குளம் மீளவும் புனரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கமத்தொழில் சேவைகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். படை அதிகாரிகள் பொலிஸ் தரப் பினர் பொதுமக்கள் ஆகியோரும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். (வ-122)

## மாகாண மட்டத்துக்கு

வலய மட்டத்தில் இடம்பெற்ற துரித கணிதச் செய்கைப் போட்டியில் காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலை அதிகூடிய இடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான 4 வகுப்புகளிடையே நடைபெற்ற இந்தப் போட்டியில் 3 வகுப்புகளில் முதல் இடத்தையும், ஒரு வகுப்பில் 2 ஆம் இடத்தையும் பெற்று 4 மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிக்குச் செல்கின்றனர்.
அத்துடன் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையிலிருந்தும் இரு மாணவர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-250)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

## கட்டுப்பாடு இழந்த வேகம்

மோதி விட்டு வேகமெடுத்து விரைந்து மறைவது டிப்பர்களின் குணமாகும். இடுப்புக்குக்கீழ் ஒரு சாண் மட்டும் இருக்கும் விதமாக சாரத்தை மடித்து சண்டிக் கட்டுக்கட்டிய அந்தக் காலச் சண்டியர்கள் போன்று சில்லுகளும் இயந்திரப்பகுதியும் முக்காலே அரைக்கால் பகுதி வெளியே தெரிய, உயர்த்திப் பொருத்தப்பட்ட உடலத்துடனான இவற்றை "இடிப்பர்" என அழைப்பதே பொருத்தமானது. வீதிகளில் குழப்படி செய்வதில் தாமும் குறைந்தவையல்ல என மோட்டார் சைக்கிள், ஓட்டோ, படிகள் ஆகியனவும் கடல், குளம், வயல், மதகு என்று ஒரே பாய்ச்சல் சாதனைதான்.
விபத்துச் சம்பவங்களில் தற்போது கூடும் புழக்கத்தில் உள்ள சாட்டு "வேகக்கட்டுப்பாட்டை இழத்தல்" என்பதாகும். மேற்படியான்கள் தடைதாண்டியும் தாண்டாமலும் பாய்தல் சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்க, ஸ்ரீமான் பொது சனத்தில் பாடுதான் வேதனை. தாம் ஓட்டும் வாகனத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க - வேகத்தைக் கட்டுப்படுத்த இயலாத மனவுலக சஞ்சாரிகளின் சாரதியம் பற்றிய மீளாய்வு சமூகப் பாதுகாப்புக்கு அவசியமாகிறது. குரோதங்களுக்கான பழிவாங்கல்கூட வேகக்கட்டுப்பாட்டை இழத்தலில் புதைந்து விடும் அபாயங்களும் சாத்தியம்.
அண்மையில் ஒரு விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளோட்டிக்கு அதிதீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஐந்தும் கெட்டநிலையில் இருந்த அவரது குடும்பத்தினருக்கு விபத்துடன் தொடர்பான இரண்டாம் தரப்பினர் "கெதியா வந்து கையொப்பத்தை வையுங்கோ" என்று அடிக்கடி தொலைபேசி மூலமாக அலுப்புக் கொடுத்தனராம். இந்த நச்சரிப்பில் இருந்து விடுபடுவதற்கே பெரும்பாடுபட வேண்டியிருந்ததாம். விபத்துடன் சம்பந்தப்பட்ட தங்களது வானை சம்பவ இடத்திலிருந்து வெளிக்கொணரும் அவசரம் அவர்களுக்கு. மனித நேயமும் கட்டுப்பாட்டை இழந்த வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றதோ...?

செல்வவேலாயுதம்.

## தாயை அடித்த தனயன்

தென்மராட்சி, ஜூன் 23
அக்காவைத் தாக்கியதைக் கண்டித்த பெற்ற தாயை அடித்து நொருக்கினார் தனயன் ஒருவர். தாக்குதலுக்கு இலக்கான தாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த தம்பிஐயா கண்மணி (வயது-83) என்பவர் நாரிப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
செவ்விளநீர் மரத்தின் தென்னம்பாளைகளை வெட்டி வீழ்த்தியதுக்கு மாற்று வலுவுடைய அக்கா, தம்பியைக் கண்டித்தபோது கையில் வைத்திருந்த நைலோன் கயிற்றால் அவரை அடித்து தாக்கியதைக் கண்ட தாய் அதனைத் தடுக்கச் சென்ற வேளையில் அவரையும் தாக்கியதில் பாதிப்பு ஏற்பட்டதாக விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள தயார் தெரிவித்தார். (க-9)

## களவாடப்பட்டது சைக்கிள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பூட்டப்பட்ட நிலையில் இருந்த சைக்கிள் ஒன்று காணாமற் போயுள்ளது.
வெள்ளிக்கிழமை இரவுக் கடமைக்கு வந்த பெண் உதவியாளர் ஒருவர் வைத்தியசாலையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி விட்டு கடமை முடிந்து மறுநாள் காலை சென்று பார்த்த வேளை சைக்கிள் காணாமற் போயிருந்தது. இது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருந்தும் சைக்கிள்கள் தொடர்ந்தும் களவாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களுக்கு மேற்படி வைத்தியசாலையில் பாஸ் நடைமுறை ஒன்று இருந்து வந்தது. ஆயினும் இந்த நடைமுறை கடந்த ஒரு மாத காலமாக நிறுத்தப்பட்டுவிட்டது. பாஸ் நடைமுறை இருந்த வேளையிலும் சைக்கிள்கள் காணாமற் போனமை குறிப்பிடத்தக்கவிடயமாகும்.
இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் சைக்கிள்கள் காணாமற் போயுள்ளவர்களுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளையோ, கொடுப்பனவுகளையோ வழங்காது அசண்டையீனமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரத்தினர் கவலை தெரிவிக்கின்றனர். (க-78)

## குருதிக் கொடை

கடந்த 18 ஆம் திகதி அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் குருதிக்கொடையில் ஈடுபட்டனர். இதற்குஇலங்கைசெஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழை கிளையினர் அனுசரணை வழங்கியதாகவும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் பிரிவு பாடசாலை மண்டபத்தில் 16 பேரிடம் குருதியைத் தானமாகப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-36)


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்



வறுத்தலை விளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், நாவலடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சுப்பிரமணியம் நேற்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரிமளம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், புஸ்பராஜா (ராஜன் -(Boring workshop), முருகதாஸ், கமலதாஸ், (France), அசோதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜலட்சுமி, கலைமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மதீஷ், கம்சியா, நிரோஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2014) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாவலடி லேன், திருநெல்வேலி.
077 233 4246
(49266) (12.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் நடராசா



புங்குடுதீவு, 8 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் நடராசா 21.06.2014 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு-கண்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தமிழ்ச்செல்வன், செந்தமிழ்ச்செல்வி, காலஞ்சென்ற கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தந் தையும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும், துளசி, விதுரன், சங்கீதா, கோகுலன், நிவேதன் ஆகியோரின் பேரனும், ராகவன், ஐஸ்வரி, வக்சலா, மோகணன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.செந்தமிழ்ச்செல்வி (மகள்)
சி.விதுரன் (பேரன்)
(யா/வைத்தீஸ்வராக்கல்லூரி, பழைய மாணவன் 2012)

189, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
021 492 5189, 077 904 1507
(49277) (4.6)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு இராசரத்தினம்

(மீசையர்- பிரபல விவசாயி)



யாழ். சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கதிரவேலு இராசரத்தினம் (மீசையர்) அவர்கள் நேற்று (22.06.2014) ஞாயிற்றுக் கிழமை காலை இறைபதம் அடைந்தார்.
அன்னார் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும், திருமதி வள்ளியம்மை அவர்களின் (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்) பாசமிகு கணவரும், திருக்குமரன், கணேசமூர்த்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், தேவகி, சுபோதினி ஆகியோரின் மாமனும், செல்வக்குமரன், கிருபாகரன், லக்சனா, யாழினி, ரவீனா ஆகியோரின் பேரனும், செல்வரத்தினம்மா, நல்லம்மா, பரமேஸ்வரி, பூலோகம், பலசுப்பிர மணியம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், பூலோகம், முருகையா மற்றும் செல்வராணி, புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் கனகரத்தினம், அன்னம்மா, செல்வராணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், நாச்சியார், சரோஜினிதேவி, சிவபாதம், செல்லையா, கணேசநாயகம் ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம்,
தொ.பே. 021 320 9093, 077 774 8814
(49276) (45.6)
தகவல்:
குடும்பத்தினர்

# இலங்ககோன் பதவிவிலகாவிடின் எனது பதவியைத் தூக்கிவீசுவேன்

## பாலித்த தேவப்பெரும எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஜூன் 23

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முழுப் பொறுப்பையும் பொலிஸார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தேவப் பெரும தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் பதவி விலக வேண்டும் எனவும் இல்லையேல் அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது, நாடாளுமன்ற



உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவேன் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பாலித்த தேவப் பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணவால் நாட்டுக்குப் பொய் தகவல்களை வழங்க வேண்டாம். அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் போது பொலிஸாரால் உரிய வகையில் சட்டம் நிலை நாட்டப்படவில்லை. இந்நாட்டில் சட்டத்தை நிலைநாட்ட முடியாது . நாட்டில் இனப் பிரச்சினையை ஏற்படுத்தி சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே வன்முறையை ஏற்படுத்துவதன் மூலம் தமது அரசியல் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அரசு மேற்கொள்ளும்திட்டங்களே இவை. அளுத்கம பிரதேசத்தில் பொதுபல சேனா பேரணியில் ஈடுபட அனுமதி வழங்கியவர்கள் அந்த பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-சி)

# அளுத்கம வன்முறையை ஏற்றுக்கொள்ள முடியாது

## இளம் எம்.பிக்கள் குழு கண்டனம்

கொழும்பு, ஜூன் 23

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாக வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுகளை வெளியிடுவதை கடுமையாகச் சாடியுள்ள இளம் நாடாளுமன்ற உறுப்பினர் கள் குழு, அளுத்கமவில் இடம்பெற்ற வன்முறையை வன்மையாகக் கண்டித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வசந்த சேனநாயக்க, ஐ.தே.கவின் ஹரின் பெர்னாண்டோ உட்பட பல இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்த 'இளம் அரசியல் தலைவர் கள் மன்றம்' இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. சமீபத்திய சூழலிற்கு மத்தியிலும் சகலபிரஜைகளும் பொறுமையாகவும், புத்திசாலித்தனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அளுத்கமவில் இடம்பெற்ற வன் முறைகளைக் கண்டித்துள்ள அவர்கள். வன்முறை யும் அச்சுறுத்தலையும் போருக் குப் பிந்திய இலங்கையில் ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளனர்.**

அளுத்கமவில் இடம்பெற்ற வன் முறைகளைக் கண்டித்துள்ள அவர்கள், வன்முறையும் அச்சுறுத்தலையும் போருக்குப் பிந்திய இலங்கையில் ஏற்றுக்கொள்ளமுடியாது என குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை இளைஞர்கள் என்ற வகையில் நாட்டின் எதிர் காலத்திற்கு மதிப்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு போன்றவை அவசியம் என வலியுறுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் அனைத்து மக்களினதும் நன்மைக்காகவும் சட்டம், ஒழுங்கை பின்பற்றுமாறும், நாட்டுக்குள் இயல்பு நிலையை நிலைநாட்டுமாறும், சமீபத்திய வன்முறையின் தொடர்ச்சியாக சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற)

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்குக

## கனடாவிடம் கோருகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 23

கனடாவில் அகதிகளாக தங்கியுள்ள இலங்கையர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான செயற்பாடுகளை கனேடிய அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தால் இந்த ஆண்டுக்கான ஆட்கடத்தல் தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். கடந்த காலங்களில் கனடாவை இலக்கு வைத்து பல்வேறு ஆட்கடத்தல்கள் நடத்தப்பட்டன. இதில் பாதிக்கப்பட்ட பல இலங்கையர்களும், ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இன்னும் குடியுரிமை வழங்கும் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படாமல் இருக்கின்றனர்.

இந்தநிலையில் கனேடிய அரசு அதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை ஆட்கடத்தல்களுக்கு எதிராக முறையான நடவடிக்கையை மேற்கொள்ளாத நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் சேர்த்துள்ளது அந்த அறிக்கை. (வ)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர்

விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்து மீளவும் நேற்றைய தினம் சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

அந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், "இலங்கைத் தமிழர்கள் நிலைமை தொடர்பிலும், போர் முடிந்தவுடன் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூனுக்கும் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எட்டப்பட்ட உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலும் நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது" என்று தெரிவித்தார்.

ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதன்பின்னர் நேற்றைய தினமும், ஐ.நா உதவிச் செயலர் தலைமையிலான குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மீளவும் சந்தித்துப் பேசியுள்ளார்.

சினமன் விடுதியில் இரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாணசபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் ஐ.நா குழுவினரைச் சந்தித்துப் பேசினர்.

இதுகுறித்துத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

"நேற்றைய (நேற்று முன் தினம்) சந்திப்பின் தொடர்ச்சியாகவே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது. இலங்கைத் தமிழர்கள் நிலைமை தொடர்பில் ஐ.நா. குழுவினர் விரிவாகக் கேட்டறிந்தனர். போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார்.

அப்போது குறித்த காலப் பகுதியில் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் எனவும், இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் எனவும், போர்க் குற்றங்கள் தொடர்பில் நம்பகரமாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஐ.நா. பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் எவ்வாறு நடைமுறைப் படுத் தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் தரங்கோ விரிவாக ஆராய்ந்திருந்தார்.

மீள்குடியேற்றம் பூர்த்தியாகவில்லை என்பதை அவருக்கு விளக்கியதுடன், அது தொடர்பிலான புள்ளி விவரங்களையும் சமர்ப்பித்திருந்தோம். அதனை விட முக்கியமாக இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது. 13ஆவது திருத்தத்தின் போதாமை குறித்து கடந்த காலங்களில் அரசுகள் ஏற்றுக்கொண்டிருந்தன என்பதையும், அதற்காக மாற்றுத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்காமைக்குரிய காரணங்களையும் விரிவாக எடுத்துரைத்தோம். தமிழருக்கான தீர்வுத் திட்டம் தொடர்பிலேயே அவர் கூடுதலாக அக்கறையுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தார்.

வடக்கு மாகாணசபையை கொண்டு நடத்துவதில் உள்ள தடங்கல்கள், அதற்குரிய காரணங்கள் என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டன"- என்று தெரிவித்தார். (ற-5)

### ஐ.நாவில்

தற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை முன்னெடுத்துள்ளது. இந்த விசாரணையின் போது, இலங்கை அரசாலும், அதன் இராணுவத்தினராலும் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராகவுள்ளனர்.

ஆயினும் இலங்கை அரசு, ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மறுத்துள்ளதுடன், சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பகிரங்கமாகவே எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, சாட்சியமளிப்பவர்கள் எதிரிகளாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்று கூறியிருந்தார்.

இவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் சுட்டிக் காட்டியிருந்தது. நேற்றைய சந்திப்பிலும் இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீளவும் தெரிவித்திருந்தது. அதற்குப் பதிலளித்த ஐ.நா உதவிச் செயலர், சாட்சியமளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அழுத்தம் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### முடங்கியது

நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இணையத்தளமும் கடந்த ஞாயிறு ஊடுருவித் தாக்கிச் செயலிழக்க வைக்கப்பட்டது என்பதை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார். ஆனால் திங்கட்கிழமை முதல் அது மீள செயற்படுத்தப்பட்டு இப்போது இயங்குகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இணையம் மற்றும் திறைசேரி, லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் போன்றவற்றின் இணையங்கள் கடந்த சில நாள்களாக ஊடுருவித் தாக்கும் நிலையை எதிர்கொண்டன என்பதை இலங்கை அதிகாரிகள் தற்போது ஒப்புக் கொண்டுள்ளனர். (ற)

### திருப்தி

களைச் சுட்டிக்காட்டியே அந்த அமைப்பு மேற்கண்டவாறு கூறியுள்ளது.

அந்தப் பகுதிகளுக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு, சண்டே லீடர் ஊடகத்தின் ஊடகவியலாளர்கள் உட்படச் சிலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்றும், பிராந்திய ஊடகவியலாளர்கள் சிலர் தாக்கப்பட்டனர் என்றும் கூறியுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களின் ஒளிப்படக் கருவி போன்ற சொத்துகளுக்குக் கடுமையான சேதம் விளைக்கப்பட்டிருந்தது என்றும் அந்த அமைப்பு கூறுகின்றது.

குறித்த சம்பவங்களை ஊடகங்கள் முழுமையாக வெளியிடுவதற்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் மிகவும் கண்டிக்கத்தக்கன. இதுபோன்ற செயற்பாடுகள் இலங்கையின் ஊடக சுதந்திர நிலைமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளன என்றும் தெரிவித்துள்ளது. (ற)

### பொருளாதார

வதன் மூலம் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எனவே, உள்நாட்டுத திட்டங்கள் மீது கூட்டமைப்புநம்பிக்கை வைக்க வேண்டும்" என்றும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் அலுவலகத்தால் முன்னெடுக் கப்படவுள்ள விசாரணை, ஐ.நா. மற் றும் அமெரிக்க அதிகாரிகளுடன் நடத் தப்பட்ட பேச்சின்போது கூட்டமைப் பினர் முன்வைத்த கோரிக்கைகள் ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைக்குழுவின் நோக் கம் என்னவென்று எமக்குத் தெரியும். திட்டமிட்டதொரு நிகழ்ச்சிநிரலை இலங்கை மீது திணிப்பதற்கான முயற் சிகள் இடம்பெறுகின்றன. அத்துடன், குறுகிய காலத்துக்குள் ஐ.நா. விசாரணைக் குழுவால் பக்கச் சார்பற்ற விசார ணையை முன்னெடுக்க முடியாது. விசாரணையாளர்கள் பக்கச்சார் பற்றவர்கள் என நாம் எவ் வாறு நம்புவது? இவற்றைக் கருத்திற்கொண்டே நாடாளுமன்றத்தினூடாக மக்களின் நிலைப் பாடு வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இலங்கைக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் கட்டியெழுப்புவதே மனித உரிமைகள் சபையின் நோக்கமாக இருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குத் தடைவிதிக்கும் அதிகாரம் இல்லாதபோதிலும் உலகின் ஆதரவைத் திரட்டி பாதுகாப்புச் சபையின் ஊடாக அதை செய்வதற்குரிய நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், ஐ.நா. குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கூட்டமைப்பு செயற்படுவது கவலையளிக்கின்றது. உள்நாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டிலேயே பேசித் தீர்க்கும் வழிமுறைகள் இருக்கையில் கூட்டமைப்பு ஏன் இவ்வாறு செயற்படவேண்டும்?"- என்று மேலும் தெரிவித்தார் அவர். (ற-சி)

### விசாரணைகள்

"இந்த நாட்டில் சகல இனங்களுக்கும் தத்தமது சமயக் கடமைகளை நிறைவேற்றும் உரிமை உண்டு. சிங்களம், தமிழ் முஸ்லிம் என்ற பாகுபாடு இன்றி சகல இனங்களும் சகல சமயங்களும் எல்லாவற்றையும் சமமாக அனுபவிக்கும் உரிமையுண்டு.

கடந்த கால போரின்போது வடபகுதியில் உள்ள முஸ்லிம்களும் அப்பாவித் தமிழர்களும் அனேக துன்பங்களை அனுபவித்துவந்தனர். வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டன. புனித தலதா மாளிகை கூடத் தாக்கப்பட்டது.

முன்னைய ஜனாதிபதிகள் எவராலும் செய்ய முடியாது போனவற்றை எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்து காட்டினார்.

சதாம் ஹுசைன் நாட்டுக்கு நல்லதைச் செய்தவர். ஆனால் அமெரிக்காவின் தலையீடு காரணமாக இன்று ஈராக்கில் தினம் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். லிபியாவிலும் இதே நடந்தது. எகிப்திலும் இதுதான் நடக்கிறது. இலங்கையிலும் இதனையே மேற்கொள்ள முயற்சிக்கும் மேற்குலகின் நடவடிக்கைகளுக்காக, எவரையும் நாட்டினுள் அனுமதிப்பதில்லை என நாடாளுமன்றில் நாம் முடிவெடுத்துள்ளோம்.

மிக வேகமாக வளர்ந்து வரும் இலங்கையின் மீது கொண்ட பொறாமை காரணமாகவே எம்மை வீழ்த்த முயற்சிக்கின்றனர்."- என்று தெரிவித்துள்ளார். (ற)




# பலம் கொண்ட ஜேர்மனியை புரட்டி எடுத்தது கானா

## றொனால்டோவின் சாதனையை சமன் செய்தார் குளோஸ்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிரிவு ஜி போட்டியில், பலமான ஜேர்மனி அணிக்கு எதிராக கானா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இரு அணிகளும் 2 கோல்கள் அடிக்க ஆட்டம் சமன் ஆனது.

இந்த ஆட்டத்தில் பிரேஸில் வீரர் றொனால்டோவின் 15 கோல்கள் சாதனையைச் சமன் செய்தார் ஜேர்மனி வீரர் மிரோஸ்லவ் குளோஸ். இடைவேளைக்கு முன்பாக இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

இடைவேளைக்குப் பிறகு ஜேர்மனி வீரர் மரியோ கூட்சீ 51ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தார்.

ஆனால் கானா அணியின் ஆந்ரே அயூ 54ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார்.

63ஆவது நிமிடத்தில் கானாவின் அசமோ கியான் ஒரு கோல் அடித்து கானாவை 2:1 என்று முன்னிலைக்கு இட்டுச் சென்றவுடன் இன்று ஒரு பெருந்தோல்வி காத்திருக்கிறது என்றே பலரும் நினைத்தனர். ஆனால் 36 வயது மிரோஸ்லவ் குளோஸ் 71 ஆவது நிமிடத்தில் அபாரமான கோல் ஒன்றை அடித்து றொனால்டோவின் உலக சாதனையைச் சமன் செய்ததோடு ஜேர்மனி சமநிலை செய்ய்வும் உதவினார்.

இடைவேளைக்குப் பிறகு ஜேர்மனியின் அன்றைய ஹட்ரிக் சாதனை வீரர் தோமஸ் முல்லர் அருமையாக ஒரு பாஸை அளிக்க கூட்சீ அதனை கோலாக மாற்றினார். இந்த முன்னிலையை நீண்ட நேரம் ஜேர்மனியினால் தக்க வைக்க முடியவில்லை. கானா வீரர் ஹாரிசன் அபுல் வலது புறமிருந்து ஒரு அபாரமான உதையை உதைக்க ஆந்ரே அயூ கோலுக்கு 6 அடி முன்னால் இருந்து தலையால் முட்டி கோலுக்குள் தள்ளினார். கானா சமன் செய்தது.

இதற்கு சரியாக 9 நிமிடங்கள் கழித்து, சல்லே மன்டரி ஜேர்மனியின் தடுப்பட்ட வீரர்களை இரண்டாகப் பிளந்து பந்தைக் கடத்திச் சென்று அசமோ கியானுக்கு அருமையாக பாஸ் அடிக்க அவருக்கு அதிசயமாக நிறைய இடைவெளி இருந்தது. விடுவாரா வாய்ப்பை? நேராக ஜேர்மனி கோல் காப்பாளர் மானுயெல் நியூயரைத் தாண்டிக் கோல் அடித்தார், ஜேர்மனி அதிர்ச்சி அடைந்தது. காரணம் 2: 1 என்று கானா முன்னிலைப் பெற்றது. பிறகே ஜேர்மனிக்கு அந்த அரிய வாய்ப்பு கிடைத்தது. அதுவும் உலக சாதனையை சமன் செய்யக் காத்திருக்கும் மிரோஸ்லவ் குளோஸுக்கு வாய்ப்புக் கிடைத்தது. மூலை உதையை நெரிசலான கானா வீரர்களின் கண்களில் மண்ணைத் தூவி கோலாக மாற்றினார். அதுவே ஜேர்மனி சமன் செய்த கோல் மற்றும் குளோஸ், பிரேசில் நட்சத்திரம் றொனால்டோவின் உலக சாதனை கோலை சமன் செய்த கோல்.

இந்த ஆட்டம் சமநிலை ஆனதைத் தொடர்ந்து பிரிவு ஜி-யில் ஜேர்மனி ஒரு வெற்றி ஒரு சமநிலையுடன் 4 புள்ளிகள் பெற்றுள்ளது. அமெரிக்க அணி கானாவை வீழ்த்தியதன் மூலம் 3 புள்ளிகள் பெற்றுள்ளது. கானா போர்த்துக்கல் அணியையும், ஜேர்மனி அமெரிக்க அணியையும், அமெரிக்க அணி போர்த்துக்கல்லுடன் விளையாட வேண்டியிருப்பதால் இந்தப் பிரிவும் இழுபறி நிலையில் உள்ளது. (த)



# போஸ்னியாவை வீழ்த்தியது நைஜீரியா

உலகக் கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நைஜீரியா-பொஸ்னியா அணிகள் மோதின. மிகுந்த விறு விறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஒரு கோல் அடித்து நைஜீரியா வெற்றி பெற்றது. இரு அணிகளும் முதல் பாதியில் விறுவிறுப்பாக ஆடின. ஆட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் நைஜீரியாவின் ஓடம் விங்கி அதிரடியான கோல் அடித்து தங்கள் அணியின் கோல் கணக்கை தொடங்கினார். முதல் பாதியில் பொஸ்னிய வீரர்கள் கட்டுப்பாட்டில் 55 சதவிகித நேரம் பந்து இருந்த போதும் அவர்களால் ஒரு கோல் கூட அடிக்கமுடியவில்லை. இந்த சூழலில் முதல் பாதி ஆட்டம் முடிந்தது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க முயன்ற போதும் அது கோலாக மாறவில்லை. இதனால் நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிடங்களுக்கு பிறகு 1:0 என்ற கணக்கில் நைஜீரியா வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக ஓடம்விங்கி தேர்வு செய்யப்பட்டார். (த)

# ஸ்பெயின் வீரர் அலோன்சா ஓய்வு



ஸ்பெயின்உதைபந்தாட்டஅணியின் முன்னணி வீரர்களில் ஒருவர் ஷாபி அலோன்சா. நடப்பு சம்பியனான ஸ்பெயின் அணி தொடக்க சுற்றிலேயே வெளியேறியதால் அவர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2003ஆம் ஆண்டில் இருந்து அவர் ஸ்பெயின் அணிக்காக ஆடி வருகிறார். 16 கோல்கள் அடித்து உள்ளார். 2 முறை ஐரோப்பிய கிண்ணம், ஒரு முறை உலக கிண்ணத்தை ஸ்பெயின் வெல்ல அலோன்சா ஆட்டம் முக்கியத்துவம் பெற்று இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# ரசிகர்களிடம் மன்னிப்பு கோரினார் வெய்ன் ரூனி



இத்தாலியை அடுத்து உருகுவேயிடம் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது. இதனால் இந்த உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றிலேயே இங்கிலாந்து வெளியேறியது. உருகுவேக்கு எதிரான ஆட்டத்தில் தனது முதல் உலகக் கிண்ணக் கோலை அடித்த இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் ரூனி, ரசிகர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். ஒவ்வொரு ஆட்டத்தையும் தன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டோம். ஆனால், துரதிஷ்டவசமாக எங்கள் முயற்சி பயனளிக்கவில்லை. இந்த தோல்வி மனரீதியாக பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரேஸிலுக்கு வந்தும், வீட்டில் இருந்தபடியும் எங்களுக்கு ஆதரவு அளித்த ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்' என, ரூனி தனது பேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார். (த)

"பிரேஸிலுக்கு வந்தும், வீட்டில் இருந்தபடியும் எங்களுக்கு ஆதரவு அளித்த ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்"

## 31 ஆம் நாள் நினைவலைகள்...

மண் மகிழ 1936 . 05 . 08



மனம் நெகிழ 2014 . 05 . 24

### அமரர் .சிதம்பரி கந்தையா

குடும்பத்தின் குல விளக்கே குவலயம் வாழ்த்திடும்
குணக் குன்றே அன்பான ஆரமுதே
அயலவர் வாழ்த்திட உறவுகள் மகிழ்ந்திட
ஊரவர் போற்றிட
உதவிகள் பல செய்த உத்தமனே
எமை மட்டும் ஏங்கித் தவிக்க விட்டு
எம்பெருமான் திருவடிக்குள்
ஐக்கியமாகி உறைந்து விட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(49286)

471/ 1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சிவலோகநாதன்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவலோகநாதன் 20.06.2014 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - ஆனந்தநாயகி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற இராசரத்தினம்-லீலாவதி தம்பதியரின் மருமகனும், சீவரத்தினம், சிவபாலசிங்கம், காலஞ்சென்ற சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சோதிஸ்வரியின் அன்புக் கணவரும், சிவதுளசியின் (சுவிஸ்) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2014) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை (சி/10173) (4.6) தகவல்: குடும்பத்தினர்.



# கலப்பு வலைப்பந்தாட்டம் யாழ்.பல்கலை சம்பியன்

யாழ்ப்பாணம், ஜுன் 23

அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கலப்பு வலைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது.

அதில் யாழ்.பல்கலைக்கழக அணி 28:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவானது.

(ற-23, 422)

## பெருவிளையாட்டு முடிவுகள் யாழ். வலயம் முன்னிலை

வலி.வடக்கு, ஜுன் 23

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கத்தால் வடக்கு மாகாண கல்வி வலயங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த காலங்களில் முதலாம் இடத்தைப் பெற்றுவந்த வலிகாமம் கல்வி வலயம் இம்முறை பின்தங்கி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுமுடிந்த பெருவிளையாட்டுக்களின் அடிப்படையில் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரம் வருமாறு

யாழ்ப்பாணம் - 715 புள்ளிகள், வலிகாமம் - 418 புள்ளிகள், வடமராட்சி - 378 புள்ளிகள், வவுனியா தெற்கு - 125 புள்ளிகள், கிளிநொச்சி - 112 புள்ளிகள், முல்லைத்தீவு - 87 புள்ளிகள், வவுனியா வடக்கு - 70 புள்ளிகள், தென்மராட்சி - 66 புள்ளிகள், தீவகம் - 51 புள்ளிகள், மன்னார் - 35 புள்ளிகள், துணுக்காய் - 08 புள்ளிகள், மடு -5 புள்ளிகள்.

(ற-86)

## கண்ணீர் அஞ்சலி



### சோதிலிங்கம் சீதாம்சன் (சீதா)

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வண்ணை காமாட்சி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

உறவினர்:
த. துஷ்யந்தன்(ரூபன்)
ஆஸ்திரேலியா-மெல்போர்ன்

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு



காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் 37,அன்னசத்திர ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு நேற்று முன்தினம் (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மல்லிகை, கந்தையா- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர் களான வாரிவளவு, நாகேசு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நாகேசு திருநாவுக்கரசுவின் (பிரபல வர்த்தகர் இங்கிரியா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சிவசோதி, காலஞ்சென்ற மனோரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியும், நித்தியானந்தன் (கிராம அலுவலர்J/135,நவாலி கிழக்கு), நித்தியலட்சுமி, பூமலர்,சந்திரகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயும், சிவகாமசுந்தரி, ஞானப்பிரகாசம் (ஓய்வுபெற்ற பொலிஸ் திணைக்கள தொலைத்தொடர்பு இயக்குநர்), சிவசுப்பிரமணியம் (BM Tex கொழும்பு),நந்தகுமார் (சுவிஸ்), ஆகியோரின் அருமை மாமியும், புஸ்பவதி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் சகலியும், நித்தியா, செந்தூரன், பகீரதன், மயூரதன், சுதர்சினி, வாசுகி, வைகுந்தன், பார்த்தீபன், தர்சினி, தர்ஷன், சுரேகா,அமலேஸ்வரன், விக்கினேஸ்வரன், கல்யாணி ஆகியோரின் அருமைப்பேர்த்தியும், லக்ஷ்சிகா, சேயோன் ஆகியோரின் அருமைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2014) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 37, அன்னசத்திர லேன், கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37,அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.
(021 222 8090)

(49283)

தகவல்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## பெயர் மாற்றம்

மண்கும்பான் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ப.வடிவேலு ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து (23.06.2014) ப.வடிவேல் எனப் பெயர் மாற்றம் செய்து கையொப்பம் இடுவேனென அனைவருக்கும் அறியத் தருகின்றேன். ப.வடிவேல்.

(49281)


## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய பூச்சி
நீக்கப்பட்ட வெள்ளை கறுப்பு
பொமனேரியன் நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 899 3561


## மரண அறிவித்தல்



### பொன்னையா செல்லப்பா

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், 8 ஆம் கட்டை துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லப்பா (ஓய்வு பெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்) தனது 102வது வயதில் நேற்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.06.2014 புதன்கிழமை காலை 8.[illegible] மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-021 - 3214480, 077 -3492680.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சோதிலிங்கம் சீதாம்சன் (சீதா)

இல, 344 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் சீதாம்சன் அவர்கள் நேற்று (22.06.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சோதிலிங்கம் - சாராதாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும் கார்த்திகா, ஜனாத்தனன், காலஞ்சென்ற நிறஞ்சன் மற்றும் சர்மிலன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஜெகநாதனின் அன்பு மைத்துனரும் ஜெகசிகன், மோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 23.06.2014) திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 344, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(49284)

தகவல்:
மைத்துனர்
ச.ஜெகநாதன் (ஜெயா)

## வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், ஜூன் 23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர்பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

## கிறீன் பீல்ட் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 23
மன்னார் உதைபந்தாட்ட லீக்கால் அங்கத்துவக் கழகங்களின் முதற்தர அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.
அதன் ஆட்டங்கள் தாழ்வுப்பாடு பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

## யாழ்.மத்திய கல்லூரி இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக் கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.
அதில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு மத்திய கல்லூரி அணி மோதியது.
ஆட்டத்தின் முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி 52:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது. (ந-23)

அரியாலை சரஸ்வதி கரப்பந்துத் தொடர்

# மோகனதாஸ், கலைமகள் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 23
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 'பி' அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றன.
முதலாவது காலிறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ந-23)




## கிண்ணம் வென்றது அரியாலை ஐக்கியம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
அரியாலை சனசமூக நிலையை 65 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டுநடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது.
இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 51:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ந-23-422)

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம், மகாத்மா சனசமூக நிலையம்என்பன இணைந்து யாழ். மாட்ட ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-



நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில்,
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியும் மோதிய ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியும், இளவாலை யங்ஹென்றிஸ்விளையாட்டுக்கழகஅணியும் மோதிக்கொண்டன.
அதில் இளவாலையங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சண்டிலிப்பாய் கல்வளை விநாயகா விளையாட்டுக் கழக அணியும், மானிப்பாய் ரெட் றேஞ்சஸ் (சிவப்பு) விளையாட்டுக்கழக அணியும் மோதிய ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழக (சிகப்பு) அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழக அணியும்
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியும் மோதிய ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ந-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் என்பன யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
6மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரை நடத்தி வருகின்றது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டங்களில் இன்று திங்கட்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வர விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
அவற்றில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23-108)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.
தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான அரையிறுதியாட்டங்கள் நடைபெறவுள்ளன.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி மோதவுள்ளது.
மாலை 5மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ந-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23
குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைஒளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

## கூடைப்பந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர் ஆரம்பமாகி நடைபெறு வருகின்றன.
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 13வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. அதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 14:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணிமோதியது. அதில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 23:18 என்ற புள்ளிகள் அடிப்படையில்வெற்றிபெற்றது. (ந-23)



# ஈரானை வீழ்த்த கடுமையாக போராடியது ஆர்ஜென்ரீனா

ஈரான் அணியை கடைசி நிமிடக் கோலினால் வீழ்த்தி, ஆர்ஜென்ரீனா அணி உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மீண்டும் லயனல் மெஸ்ஸியின் மஜிக் கோல்தான் ஆர்ஜென்ரீனாவை சமநிலை என்ற சங்கடத்திலிருந்து காப்பாற்றியது.

இடைவேளைக்குப் பிறகு ஈரானின் 3 கோல் முயற்சிகளை ஆர்ஜென்ரீனா கோல் காப்பாளர் செர்ஜியோ ரொமேரோ தடுத்தார்.

ஆனால், இந்த வெற்றியை ஈட்டப் படாத பாடுபட்டது உலகப் புகழ் பெற்ற மெஸ்ஸியை தன் வசம் வைத்திருக்கும் ஆர்ஜென்ரீனா. ஈரான் தன் பங்குக்கு தைரியமாக ஆடியது அவ்வளவே. ஆனால் 'கோல் போட முடியாது உங்களால்' என்று ஆர்ஜென்ரீனாவிடம் சவால் விடுத்தது போல் இருந்தது அதன் தடுப்பு உத்தி.

மெஸ்ஸியை பெரும்பகுதி ஈரான் சாந்தமாக வைத்திருந்தது. அவருக்கென்று பிரத்தியேகமாக வீரர்களை நியமித்தது ஈரான். அதனால் அவர் கடைசி நிமிடம் அந்த கோல் அடிக்கும் வரை சாதுவாகவே காணப்பட்டார்.

ஆனாலும் எப்படித் தடுப்பு உத்தி செய்தாலும் ஒரு கோல் அடிக்க ஆர்ஜென்ரீனா இவ்வளவு போராடும் என்று ஒருவரும் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

மேலும் ஒரு சமயத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் பேபியோ சபலேட்டா ஈரான் வீரர் அஸ்கான் தேஜகாவை பெனால்டி பகுதிக்குள் பவுல் செய்ததாக பெனால்டி கொடுக்க ஈரான் தரப்பிலிருந்து பெரும் முறையீடு எழுந்தது. நடுவர் ஏன் அதனை ஏற்கவில்லை என்பது சர்ச்சைக்குரிய ஒன்று.

முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா விடமே பந்து அதிகம் இருந்தது. ஆனாலும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட ஈரான் பாதுகாப்பு அரணை உடைக்க முடியவில்லை. முதல் கோல் வாய்ப்பு ஆர்ஜென்ரீனா வீரர் ஹிகுவேயிற்கு வந்தது. பெர்னாண்டோ காகோ அளித்த பாஸை கோலாக மாற்ற முயற்சித்தார். ஆனால் ஈரான் கோல் காப்பாளர் மிக தைரியமாக ஹிகுவே காலடியில் பந்தைப் பிடித்தார்.

அதன் பிறகு மெஸ்ஸி மற்றும் ஏஞ்சல் டி மரியா இருவரும் இரண்டு நேரடி உதை வாய்ப்புகளை ஈரான் கோல் கம்பத்துக்கு மேல் அடித்து விரயம் செய்தனர். பிறகு மெஸ்ஸி அதிசயமாக சில பாஸ்களை செய்த போதிலும் ஆர்ஜென்ரீனா கோல் வாய்ப்பு கைகூடவில்லை.

மாறாக இடைவேளைக்கு சற்று முன் ஈரான் வீரர் ஜலால் ஹொசைனி ஏறக்குறைய கோலை அடித்திருப்பார். அது ஈரானின்வலியை அதிகரிக்கும் விதமாக கோல் கம்பத்துக்கு மேலே சென்றது.

அதன் பிறகு ஈரான் வீரர் ரேசா தலையால் ஒரு பந்தை கோலை நோக்கி அடிக்க ஆர்ஜென்ரீனா கோல் காப்பாளர் தடுத்து நிறுத்தினார். இதற்கு அடுத்த படியாக பெனால்டி முறையீடு எழுந்தது. ஆனால் நடுவர் சம்மதிக்கவில்லை.

இந்த நிலையில் ஒரு புகழ்பெற்ற சமநிலை நோக்கி ஆட்டம் சென்றது. குறித்த 90 நிமிட ஆட்டம் முடிவடைய காயத்தில் நிறுத்தப்பட்ட ஆட்ட நேரத்தை ஈடுகட்டும் நேரத்தில் மெஸ்ஸி மஜிக் நிகழ்ந்தது.

வலது புறம் ஒரு பாஸை வாங்கிய மெஸ்ஸி சில பல உத்திகளைக் கையாண்டு பந்தை தான் அடிக்க முடியக்கூடிய இடைவெளி கிடைக்குமாறு செய்து கடைசியில் இடது காலால் ஒரே உதை உதைக்க பந்து ஈரான் கோலுக்குள் சீறிப் பாய்ந்தது. உண்மையில் அபாரமான கோல் இது. அவரது இத்தகைய கோல்களை நிறைய சம்பியன்ஸ் லீக் ஆட்டங் களில் பார்த்திருக்கலாம். ஆனால் வெகு அரிதாகவே சர்வதேச ஆட்டங்களில் இத்தகைய கோலை அவர் அடிப்பது வழக்கம். மெஸ்ஸி 2 ஆவது கோலை இந்த உலகக் கிண்ணத்தில் அடித்துள்ளார். இரண்டுமே வெற்றிக் கோல்கள்.

(த)

Dip in Mobile Repairing
அனைத்துவிதமான கையடக்க தொலைபேசிகளிலும் ஏற்படும் Hardware, Software பழுதுகள் அனைத்தினையும் பழுதுபார்ப்பது பற்றி 100% Practical ஆக கற்றுக்கொள்ளுங்கள்
புதிய பிரிவு 28.06.2014 சனிக்கிழமை மாலை 4.00ற்கு ஆரம்பமாகின்றது
INFOTECH COMPUTER EDUCATION
வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கான சிறந்த கற்கைநெறி
#3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna.
T.P: 021-492-2813, 077 6138955.

A/L CHMISTRY
2015 - ORGANIC , Paper class
2016- பரீட்சை (இரசாயன அலை இல- 10) 26.06.2014
2016 - Chemical Calculation, Paper class (பிரிவு III) ஆசிரியர் திரு.சுரேஸ்குமார் BSc (Hons) MBA (Lon)
THE SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

A/L பொருளியல்
MCQ BOOK -1,2,3,4,5
BOOK-6
ரூபா: 80
வினாவிடை நூல்கள்
வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை.

SPOKEN ENGLISH



அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம்
பிரிவு 1 : 08.00-10.00 பிரிவு 2 : 10.00-12.00
பிரிவு 3 : 01.00-03.00 பிரிவு 4 : 03.00-05.00
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
"பயிற்சியில் இணையும் அனைவரும் 28.06.2014 இற்கு முன் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்"
பயிற்சிநெறி முடிவில் Diploma in English Certificate வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 33 13
077 621 4567

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு—டுபாய் | —19000 | O/W |
| கொழும்பு—சென்னை | —21900 | RTN |
| கொழும்பு—திருச்சி | —22400 | RTN |
| கொழும்பு—டோகா | —26000 | O/W |
| கொழும்பு—மலேசியா | —30000 | RTN |
| கொழும்பு—சிங்கபூர் | —30200 | RTN |
| கொழும்பு—பிரான்ஸ் | —45500 | O/W |
| கொழும்பு—லண்டன் | —44800 | O/W |
| கொழும்பு—[illegible] | —83500 | RTN |
| கொழும்பு—அவுஸ்ரேலியா | —98500 | RTN |
| கொழும்பு—[illegible] | —105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.